
குருபாதம்

# ஞானசம்பந்த[ம்]

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23] குரோதிஆண்டு வைகாசித்திங்கள் 10—6—64 [ இ

தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஆச்சாள்புரம்
ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி தேவஸ்தான மகாகும்பாபிஷேக விழாவில்



பஞ்சமூர்த்திகள் திருவீதிஉலா.

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

## தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23 | 10-6-64 | இதழ் 7

## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | திருத்தருமையிலே திருநெறிய தமிழ் | ... 375 |
| 2 | நேருவின் ஆன்மா சாந்தி பெறுக | ... 379 |
| 3 | வணக்கம் | ... 382 |
| 4 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை | ... 383 |
| 5 | ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்கா தேவி ஸ்துதி | ... 390 |
| 6 | சித்தாந்த வினாவிடை | ... 391 |
| 7 | சங்க இலக்கியங்களில் சமயம் | ... |
| 8 | தொல்காப்[illegible] | |
| 10 | [illegible] | |
| 11 | அமை[illegible] சொல்வ[illegible] | |
| 12 | திருநெறிய தெய்வத் தமிழ் | |
| 13 | செய்திகள் | ... 42[illegible] |
| 14 | எதிர்காலம் | ... 427 |


[illegible]மையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர்

## அருள்வாக்கு

அகமாதி கண்ட
அறிவாகி எங்குஞ்
சுகமாகி இன்ப
சுகமாய்ச்—சுகாதீதத்
தானந்த வெள்ள
மதுவாய்ச் சுகத்தை அ[illegible]
ஞனந்தம் ஆதியிலா
தான். (1[illegible])

ஆசிரியர்:-

வித்துவான்,

சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள்

துணையாசிரியர்:-

வித்துவான்,

சோ. சிங்காரவேலன், M. A.,

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23 ] சோபகிருது - வைகாசி - 10—6—64 [ இதழ் 7

திருச்சிற்றம்பலம்

*பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை*
*பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!*
*கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!*
*நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)*

திருச்சிற்றம்பலம்

## திருத்தருமையிலே திருநெறிய தமிழ்

சைவசித்தாந்தத்தின் உயர்பெருங் கோள்கைகளைக் காலந்தோறும் விளக்கம் செய்வது ஒரு பெருந்தொண்டு ஆகும். உயர்ந்த தத்துவ நெறியாக - உலகம் போற்றும் நன்னெறியாக உள்ள சித்தாந்த சைவத்தின் செம்மையை 'திருநின்ற செம்மை' என்றுதான் கூறவேண்டும். ஆம்; 'சென்றடையாத திரு' என்று திருஞானசம்பந்த சுவாமிகளாற் சிறப்பிக்கப்பெற்ற திருவருட்செல்வத்தை வாரி வழங்கும் ஞானக் கருவூலங்களாக உள்ளன நம் சாத்திரங்கள்; தோத்திரங்களோ உள்ளக் கனிவை உண்டாக்கி

இறைவன் திருவடிகளோடு ஒன்றுபடுத்தும் பேற்றி உடையனவாக உள்ளன. இத் தோத்திர சாத்திரங்களை அறிவு, உணர்ச்சி ஆகிய இருநிலைகளில் நின்று ஈடுபட்டு அடையும் இன்பம் அளவிட முடியாது. வரும் பயன்களும் பெரியவை. இம்மை, அம்மை - இருமைக்கும் பயன்களைப் பெறும் உறுதியான உள்ளத்திற்குத் தோத்திர சாத்திரங்கள் காட்டும் நெறியும் பயனும் கண்கூடானவை. திருஞானசம்பந்தப் பெருமானுடைய திருவெண்காட்டுப் பதிகத்துள் 'பேயடையா பிரிவெய்தும்' என்னுந் திருப்பாட்டே சந்தனாசாரியருள் முதல்வராக விளங்கும் மெய்கண்டாரை உலகிற்கு வழங்கியது. இந்த ஆசாரியப் பெருமக்கள் அருளிய திருநெறியில் சைவாதீனங்கள் இன்று நின்று நிலவி 'நீடும் பணிகள் பலவும்' புரிந்து வருகின்றன.

ஆதீனங்கள் அறச்சாலைகளாக விளங்குதல் நாட்டின் உயர்வுக்குச் சான்று. அங்கே வாழும் பெரியோர்களால் உலகு வாழும்; நிலைக்கும். தமக்கென முயலா நோன்றாட் பிறர்க்கென வாழும் பெரியோர்கள் புறநானூற்றுக் காலத்திற்கு எவ்வளவோ ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நம் நாட்டில் மட்டுமன்றி உலக முழுவதும் உள்ளமையாலேயே உலகு நிலைத்து நிற்கின்றது. உலக வாழ்வுக்கு ஒளி கூட்டும் உத்தமர்கள் அவர்கள். அவ்வுத்தமர்களுள் ஒருவராய், தவஞானத் தனி முனிவராய், வையகம் வாழவந்த வண்பேரருட்குரிசிலாய், சிவஞானச் செவ்விளஞாயிறாய், தருமையாதீனத் தனிமுதல்வராய்த் திகழ்ந்த ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் உலகின் நினைவில் என்றும் இருத்தற்கு உரியவர்கள். ஞானத்தின் தனிக்கொழுந்தாய்த் திகழ்ந்த அவர்கள் அருளிய அருள் நூல்கள் தொடங்கிப் பண்டார சாத்திரங்கள் தருமையாதீனச் சிவப்பண்ணையிலே செழித்தன. அவற்றைக் காலந்தோறும் ஓதியும், பக்குவ ஆன்மாக்களுக்கு ஓதுவித்தும், அருள்ஒளி பெருக்கி வருவது தருமையாதீனக் குருமரபு.

தருமையாதீன அடியவர்கள் திருத்தருமையிலே ஆற்றும் அன்றாடச் செயல்கள் யாவை என்று கேட்ட மைசூர் மன்னனுக்குச் சம்பந்த சரணாலயத் தம்பிரான் என்ற தவ முனிவர் இறுத்த விடை செய்யுளாக உள்ளது. அச்செய்யுள் தருமையாதீன அடியவர் செயல்களை மட்டும் கூறுவதாக அன்றி, ஒப்புயர்வற்ற பேருஞானியர் நிலைகளைச் சுருங்க எடுத்துரைப்பதாக உள்ளது. அத்திருப்பாடல் இது;

" ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல்லாம் கல்விகேள்வியல்லல்
ஓய்வார் சிவானந்த வாரியுள்ளே ஒன்றிரண்டுமறத்
தோய்வார் கமலையுள் ஞானப்பிரகாசன்மெய்த்தொண்டர்களே"

முதற்கண் பதி, பசு, பாசம் என்ற திருநெறிச் சிந்தனை, முப்பொருள் ஆராய்ச்சி; சாத்திரத் தெளிநிலை. அடுத்து அச் சாத்திர ஆராய்ச்சியின் தத்துவஞானம் என்னும் மெய் அறிவு தலைப்படுத்தல்; மெய்யறிவு தலைப்பட்ட ஞான்றே சிவபிரான் திருவடிக்கீழ் நின்று பேராவியற்கைப் பெருவாழ்வு எய்துதல் ஆகியமூன்றையும் மெய்த்தொண்டர்கள் என இயல் பாகக் காட்டுகின்றது பாட்டு. தருமையில் உள்ள பல்லியும் பதி, பசு, பாசம் உரைக்கும் என்று கூறப்பெறுவது புனைந் துரையன்று; மெய்யுரை என்பது திருநாவுக்கரசு தேசிக சுவாமிகள் அருளாட்சியில் ஓரறிவுயிர் முதலனவும் தீட்சை பெற்றுத் திருவருட்செல்வம் பெற்றமையான் இனிது விளங் கும். இவ்வாறு செய்யும் சாத்திர ஆராய்ச்சி திருநெறித் தெளிநெறி மேலும் மேலும் வளர்ந்து இன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளின் அருளாட்சியில், ஓங்கி நிற்கின்றது. பன்னிரு திருமுறை ஆராய்ச்சியில் ஆறும் திருமுறை நிறைவுற்றுச் சுந்தரர் செந்தமிழ் தொடங்கி நிகழ்ந்து வரு கின்றது. ஆண்டிற்கோருமுறை பத்து நாட்கள் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டில் தோத்திர சாத்திர ஆராய்ச்சி அரங்கு நிகழ்த்திச் சிறப்புறச் சிவமணம் பரப்புதலும் குரு மணியவர்கள் திருவுள்ளம். இவற்றால் உலகு மண்மொழி மெய்களான் சிறத்தல் வேண்டும் என்பது உயர் நோக்கு.

அந்நோக்கினைத் திரளாக வந்து பயன்பெறும் அன்புலகு இவ்வாண்டு நற்பயன் எய்திற்று எனல் சொல்லாமலே விளங்குவதாகும்.

குருபூஜை, பட்டணப் பிரவேசம், ஆகிய சிறப்புத் திருநாட்கள் தருமையாதீன மடாலயத்தில் இனிது நிகழ்ந்தன; தோத்திர சாத்திர மாநாடுகள் விளக்கம்பெற 23—5—64 முதல் 26—5—64 முடிய நிகழ்ந்தன; பின்னர் ஸ்ரீ ஞானபுரீசுவரர் உற்சவ நெறிமுறை உவந்து கடைத்தேறும் உயிர்களுக்கு ஒரு மருந்தாயிற்று. இறைவன் இணையடி நிழலில் ஒன்றிரண்டும் அறத்தோய்ந்து இன்புறற்கு இத்தகைய சாதன நிலைகள் பெரிதும் தேவையன்றோ ? குருபூஜை முதலியன அனைத்தும் உலகு இதனை உணர்ந்து தெளிதற்கு உறுதுணை ஆயின என்பது உண்மை.

குமரகுருபரன் ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமாரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்,

"குமாரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

# நேருவின் ஆன்மா சாந்திபெறுக

உலகில் தனக்கென ஒரு கொள்கை உடையவர்களைப் பெரியோர்கள் என்கின்றோம். குறிக்கோளில்லாது வாழ்பவர்களை மனிதர்களாகக் கருதமாட்டார்கள் பெரியோர்கள். அதே போன்று "உலகத்துக்கு உழை; செய்யவேண்டியதை உடனே செய். செயற்படும்பொழுது சோம்பியிருந்து சமாதானம் சொல்லாதே, என்ற உயர்ந்த கொள்கையைத் தனக்குத்தானே வகுத்துக்கொண்டு தேசமே உயிர்மூச்சு; தேசமே தனதுஉடமை, தேச மக்களே தனது உற்றார் உறவினர் எல்லாம்; மக்கள் விடுதலையே தனது லட்சியம்" என்ற நெறி பிறழாது உலகத்தில் ஒப்பற்றவராகத் திகழ்ந்து வழிகாட்டிச் சென்றிருக்கிறார் நமது நேரு.

நேரு குடும்பம் ஒரு உலகக் குடும்பம். நல்ல பண்பாடும் உயர்குணங்களும், உறுதியும், அஞ்சாமையும் உடைய ஆண்மகனாக - இந்தியர்களின் உதாரண புருஷராக வாழ்ந்து மறைந்துவிட்டார் நமது நேரு. செய்யவேண்டிய காலங்களில் மத சம்பந்தமாக உரியதைச்செய்ய அவர் தவறியதில்லை. சுதந்திர அரசின் அமைச்சர் பதவியை ஏற்கவந்தபொழுது, வேத மந்திரங்கள் ஒலிக்க, திலகமிடப்பெற்று, பெண்கள் தீப ஆரத்தி சுற்றிய பின்னரே புறப்பட்டார். பாரதநாட்டு விழாக்களில் இளைஞர்களைப்போல மகிழ்ச்சியோடு கலந்துகொண்டார். அவர் மேற்கொண்ட தேச விடுதலை, மக்கள் சமுதாய விடுதலை இவைகளுக்குப் பாடுபடுவதிலேயே அவருடைய நேரம் முழுவதும் கழிந்தது. அவருடைய உயர் முயற்சியின் உழைப்பு அவருக்கு உலக மதிப்பைத் தந்தது. நவபாரதம் வேறு, நேரு வேறு என்று பிரிக்கமுடியாது பின்னிப் பிணைந்துவிட்டது அவர் வாழ்க்கை. அவர் வாழ்க்கை வரலாறு ஒரு புது சகாப்தத்தின் சரித்திரமாக விளங்குகிறது. அவர் ஒரு உலக சிற்பியாகத் திகழ்ந்தார். அவர் வாழ்க்கை இந்திய சரித்திரமாக விளங்குகிறது. நமது பழைய கலாசாரம் பண்பாடு, நாகரிகம் இவற்றைப் புறக்கணிக்காது புது உலகில் உலவும், நல்ல பல பழக்க வழக்கங்களையும் மேற்கொள்ள வேண்டுமென்பது அவர் விருப்பம். பகவத்கீதை படிப்பதில் ஈடில்லாத ஆசையுடையவர். காந்திய வழியே தமது வழி. அந்த காந்திய

லட்சியமே தமது லட்சியம். காந்தியே தமது ஞானத் தந்தை: அரசியல் தந்தை; தமது வழிகாட்டி என்று கொண்டவர். அவர் வழியிலேயே நமது நாட்டுக் கொள்கையையும் வகுத்துக் கொடுத்திருக்கிறார். அந்த அரசியல் ஞானத் தந்தை பாராயணம். ஜபம், பஜனை முதலியவற்றில் ஈடுபாடுடையவர். மோனத் தவத்தில் ஊறித் திளைத்து அந்த அறவழியிலேயே நமக்குச் சுதந்திரம் வாங்கித்தந்த பெரியார்.

அவர் வழி ஒழுகிய நமது பாரதப் பிரதமர் சில பழக்க வழக்கங்களைக் கண்டித்து சமயம், சடங்கு இவைபற்றிப் பல வாறாகப் பேசியும் இருக்கிறார். அவர் எழுதிய நூல்களில் நமது இந்திய சமயங்கள், தத்துவங்கள், மொழிகள், கலை கலாசாரம் முதலிய பல பொருள் பற்றியும் எழுதியிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அந்த நிலையிலேயே நமக்கு சமூகச் சீர்திருத்தங்களும், வாழ்க்கை முறைகளும் அமைதல் வேண்டுமென விரும்பினார். அதற்காக உழைத்தார். வித்திட்டு, வளர்த்து, அரும்பிப் பூக்குங்காலத்தில் முழுவிளைவும் காணுதே மறைந்து விட்டார். அவர் மறைந்த நேரம் நமது நாட்டில் பல சிக்கலான விஷயங்கள் முடிவுசெய்ய வேண்டிய காலம். அவற்றின் முடிவுகண்டு ஒரு ஸ்திரநிலை உண்டாக்கிக் கொடுக்க அவர் இல்லை. அவர் வழியில் நின்று நாம் அவற்றைப் பூர்த்தி செய்யக் கடமைப் பட்டுள்ளோம். அவர் மறைந்த செய்திகேட்டு உலகத் தலைவர்களும், உலக மக்களும் வருந்துகின்றனர். அவரை நினைந்து உலகம் முழுவதும் அழுதது.

இத்தகைய பெரியவருக்குப்பின் இந்தியாவின் கதியென்ன? அவர் பதவியில் வரத்தகுதியுடையவர்-அவர் வாரிசாகவரத் தகுதியுடையவர்யார்? என்று பல நாட்களாக உலகமே கவலையுற்று வந்தது. அவரை அணுகிப் பலரும் கேட்கவும் செய்தனர். எனக்கு வாரிசு நானே தேடத்தக்கதான ஆள்பஞ்சம் என் நாட்டில் இன்னும் வரவில்லை. ஜனநாயக ரீதியில் அமைந்துள்ள எங்கள் நாட்டில் அதனை இட்டுச்செல்ல அறிஞர்கள் வல்லமை உடையவர்கள் பலர் இருக்கிறார்கள் என்று சொல்லி வந்தார். அதற்கேற்ப அவர்வழியிலே அவருடனிருந்து பலவற்றிற்கும் உதவிய - காந்தீயத்தில் அழுந்திய நம்பிக்கையும் தியாக உணர்வும் உடைய நமது லால்பகதூர் சாஸ்திரி அவர்கள்

தலைமை ஏற்கிறார்கள். நேருவின் மரணத்திற்குப்பின் இந்திய மக்கள் தலைவர்கள் தங்கள் தங்கள் சுயநலனையும் மதிப்பையும் நாட்டுக்காக விட்டுக்கொடுத்து ஒற்றுமையாக நிற்பார்கள் எனக் காட்டியிருக்கிறார்கள் ஸ்ரீசாஸ்திரியின் தேர்வில். இந்தநிலை உருவாக்கப் பெரும்பங்கு கொண்டவர் நமது ஸ்ரீ காமராஜர். அவர் பலரையும் தனித்தனியே கண்டுபேசி ஒற்றுமையான ஒரு ஏற்பாட்டை உண்டாக்கினார். ஸ்ரீ காமராசரது செய்கையால். அவரது சொல்லால் பல தலைவர்களும் இசைந்து நடந்தனர். அதனால் உலகில் நமது நாட்டின் பெருமை மேலும் ஒருபடி பெருகியிருக்கிறது.

நல்ல ஆட்சி அனுபவமும் தியாகசீலமும் உடைய ஸ்ரீ காமராசரது முயற்சிகள் எல்லாம் முழுவெற்றி அளித்துவருகின்றன. இதே நிலையில் இனிவரும் சந்ததியாரும் பின்பற்றத் தக்க ஒரு ஒப்பற்ற சம்பிரதாயத்தை உண்டாக்கிவிட்ட பெருமை ஸ்ரீ காமராசருக்கு உண்டு.

புதுப்பிரதமர் சாஸ்திரிஜி புனித ஸ்ரீ காசியில் நல்ல பண்டிதர்களிடம் பயிற்சி பெற்றவர். சமயப்பற்றுடையவர் அஞ்சா நெஞ்சமும் அவதிக் காலங்களில் அவற்றைத் திருத்தி நல்வழியிருத்தும் ஆற்றலும் மிக்கவர். அவர் ஆட்சியில் நமது நாட்டின் பெருமை மேலும் ஓங்கிப் பெருகி வளர்வதாக.

இவ்வளவையும் கட்சித்தலைமையில் அமர்ந்து திறம்படச் செயல்புரியும் காமராசர் எல்லா நலன்களும் பெருக நீண்டநாள் வாழ்வாராக.

சொக்கேசன் திருவருளால் நேருவின் ஆன்மா சாந்தி பெறுவதாக. அவர் செல்வமகள் இந்திரா மனந்தேறி தந்தை வழியிலே மேலும் மேலும் உழைத்து வரத்தக்க மனவலிமை அவருக்கு உண்டாவதாக.

# வணக்கம்

ஞானசம்பந்தம் இத்திங்களிதழில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் சிவப்பிரகாசம் என்னும் நூலின் சிந்தனையாக அருளுரை வழங்கி யருளியுள்ளார்கள். சிவப்பிரகாசத்தில் கூறப்பெறும் சிறந்த கருத்துக்களை எளியநடையில் " புறச்சமயத்தவர்க்கிருளாய் " என்னும் பாடலை எடுத்துக் கொண்டு விளக்கம் தந்துள்ளார்கள். அது படிப்பவரின் மனத்தில் சிவம் பிரகாசிக்கச் செய்யும் தன்மையுடையதாய் விளங்குகிறது. "ஆய்வார் பதி பசு பாசம்" என்ற பாடற் பொருள் விளக்கத்தோடு அமைந்த ஆதீனக் குருமுதல்வர் குரு பூஜை விழா பற்றிய தலையங்கமும் இவ்விதழை அணிசெய்கிறது.

பாரதப் பிரதமர் ஸ்ரீநேருவின் ஆன்மா சாந்தியடைய அனுதாபம் தெரிவிக்கும் வகையில் துணைத்தலையங்கம் அமைந்துள்ளது.

சிறப்பாகத் தருமையாதீனக் குருமுதல்வர் குருபூஜை விழா நிகழ்ச்சியும், திருநெறிய தெய்வத்தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகளும் வழக்கம்போல் வருகின்ற சித்தாந்த வினாவிடை, சகஸ்ராகமம், தொல்காப்பியச் சொல்லதிகார விளக்கக் கட்டுரை, தமிழ்கூறும் நல்லுலகு என்ற தலைப்புக்களில் வெளியாகும் கட்டுரைகளும், சங்க இலக்கியத்தில் சமயம் என்ற தலைப்பில் அமைந்த புதிய கட்டுரையும், செய்திகள் எதிர்காலம் முதலியனவும் இவ்விதழை அணிசெய்கின்றன.

ஞானசம்பந்தம் வாசகர்கள் பெற்றுப் பயனடைவார்களாக.

உ
குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் வழங்கியருளிய

# அருளுரை

## சிவப்பிரகாசம்

புறச்சமயத் தவர்க்கிருளாய் அகச்சமயத் தொளியாய்ப்
புகல்அளவைக் களவாகிப் பொற்பணிபோல் அபேதப்
பிறப்பிலதாய் இருள்வெளிபோற் பேதமுஞ்சொற்
பொருள்போல்
பேதாபே தமும்இன்றிப் பெருநூல் சொன்ன
அறத்திறனால் விளைவதாய் உடலுயிர்கண் ணருக்கன்
அறிவொளிபோற் பிறிவரும்அத் துவிதமாகும்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன்இங்குத் தெரிக்க லுற்றாம்.

— உமாபதி சிவம்

*சித்தாந்த உண்மைகளை விளக்கும் நூல்கள் பதினான்கு என்பதும், அவைகள் சித்தாந்த சாத்திரம் என்றும் 'மெய்கண்ட நூல்கள்' என்றும் வழங்கப்பெறுகின்றன என்பதும் நன்கறியப் பட்டவை. அவற்றுள் மெய்கண்டதேவ நாயனார் அருளிய சிவஞான போதமே சித்தாந்தப் பொருள்கள் அனைத்தையும் பன்னிரண்டு சூத்திரங்களில் மிகச் சுருக்கமாக அமைத்து அருளிய முதல் நூலாயும், அருணந்திதேவ நாயனார் அருளிய சிவஞானசித்தியார், அம்முதல் நூற்பொருளை அனைவரும் எளிதாக உணர மிக விரிவாகச் செய்தருளிய வழி நூலாயும் இருத்தலின், அந்த இரண்டு நூல்களே சித்தாந்த சாத்திரங் களுள் முதன்மை வாய்ந்தன என்பதும், அங்ஙனமே யாவரும்*

நன்கறிந்தவை என்றாலும், உமாபதி சிவம் அருளிய '**சிவப்பிரகாசம்**' என்னும் சார்பு நூலும் அவற்றிற்கு அடுத்த படியில் முதன்மை பெற்று விளங்குகின்றது.

சிவஞான போதம், சிவஞானசித்தி என்னும் இரு நூல்களுக்குள்ளே சித்தாந்த உண்மைகள் யாவும் அடங்கிக் கிடக்கின்றன என்றாலும், அவற்றில் வெளிப்படையாக விளங்கித் தோன்றாத பல நுண்பொருள்களை உமாபதி சிவாசாரியார் தமது சிவப் பிரகாசத்துள் எடுத்தோதி விளக்கியுள்ளார். எனவே, 'சிவ ஞான போதம், சிவஞான சித்தி' என்னும் கருவூலங்களில் உள்ள பல சிற்றறைகளைத் திறந்து அவற்றில் பொதிந்துள்ள பல அருமணிகளைக் காண்பதற்குச் சிவப்பிரகாசம் சிறந்த திறவு கோலாய் உள்ளது எனலாம். போதம், சித்தி இரண்டிற்கும் உள்ள முன்னை உரைகள் இத்திறவுகோலைப் பெற்று இயன்று உள்ளமை அவ்வுரைகளிலே நன்கறியப்படும்.

முதலாவதாக, '**சைவ சித்தாந்தம்**' என்னும் பெயரே, இந்நூற்கு முன்னே உள்ள ஆறு நூல்களில் சொல்லப்பட வில்லை. "சிவம் என்னும் அந்த தர" என்னும் சிவஞானபோத இறுதி வெண்பாவில், "**அந்த தர**" என்றதற்கு இச்சிவப் பிரகாசத்துட் கண்ட பொருள் உரையில் சொல்லப்படுகின்றது. சிவஞான சித்தியாரில், "சித்தாந்தத்தே சிவன்தன் திருக்கடைக் கண் சாத்தி" என்று மட்டும் வருகின்றது. ஆனால், 'சைவ சித்தாந்தம்' என்று எடுத்துச் சொல்லி, அஃது இன்ன இன்ன பெருமைகளை எல்லாம் உடையது என்று, அதன் சிறப்பை யெல்லாம் சிவப்பிரகாசமே இனிது விளக்குகின்றது. அவ் விளக்கம் இந்நூலின் முதலிலும், முடிவிலும் அமைந்துள்ளது. அவற்றுள் முதலிற் காணப்படும் விளக்கத்தை உடைய சிறந்த செய்யுளே தலைப்பில் தரப்பட்டிருப்பது.

சமயங்கள் பலவாயினும், அவைகளை 'ஆறு' என்று வரை யறுப்பது தொன்றுதொட்ட வழக்காய் உள்ளது. "அறிவினால் மிக்க அறுவகைச் சமயம் அவ்வவர்க்கங்கே ஆரருள் புரிந்து" என்ற சுந்தரர் திருவாக்காலும்

**"அறுவகைச் சமையத்தோர்க்கு மவ்வவர் பொருளாய் வேறுங்**
**குறியது வுடைத்தாய் வேதாகமங்களின் குறியிறந்தங்**
**கறிவினி லருளான் மன்னி யம்மையோ டப்ப னாகிச்**
**செறிவொழியாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்"**

என்ற அருணந்தி தேவநாயனார் திருவாக்காலும் சமயங்கள் ஆறு என்று வரையறுக்கப்பட்ட தொன்மை வழக்கை யறியலாம். இனி, சமயங்களை, 'அகச்சமயம்; புறச்சமயம்' என இரண்டாக வகுத்து, 'அகச்சமயம் ஆறு; புறச்சமயம் ஆறு' என்றல் மரபு' இவற்றிற்குமேல், புறச்சமயத்தை, 'புறப்புறம், அகப்புறம். என மூன்றாகப் பிரித்து, ஒவ்வொன்றிலும் ஆறு சொல்லி, அவை களை, 'முக்கூற்றுப் புறச்சமயங்கள்' என வழங்குதலும் உண்டு'

'வேதம், சிவாகமம்' என்னும் இரண்டும் முதல் நூல்கள். இவற்றுள் ஒன்றையும் உடன்படாது, அவற்றிற்கு எதிராக-வேறு நூல்களைச் செய்துகொண்ட மதங்கள் புறப்புறச் சமயங்கள். வேதத்தை உடன்பட்டு, சிவாகமத்தை உடன்படாத மதங்கள் புறச்சமயங்கள். வேதம், சிவாகமம் என்னும் இரண்டினையும் உடன்படினும் அவற்றோடு பிற நூல்களையுங் கூட்டிப் பிரமாணங்கொள்ளும் மதங்கள் அகப்புறச் சமயங்கள். சைவ சித்தாந்தத்தோடு பெரும்பான்மையும் ஒத்து, சிறுபான்மை மாறு படும் மதங்கள் அகச் சமயங்கள். 'இச்சமயிகள் அனைவருக்கும் விளங்காத அரும்பெரும் பொருள் சைவ சித்தாந்தம்' என்பதை முதற்கண் கூறுகின்றது மேற்காட்டிய செய்யுள்.

தருமையாதீன முதற்குரவர் ஸ்ரீகுருஞானசம்பந்தர் சித்தாந்த முத்தி பற்றிக் கூறும்பகுதி இங்கே ஓர்ந்துணரத்தக்கது.

"உள்ள மலநீங்கி யோங்கு சிவாநந்த
வெள்ளந் திளைத்ததுவாய் மேவுதலே — கள்ளவிழ்பூங்
கொத்தார் விரிசடையார் கூறு சிவாகமத்திற்
சித்தாந்த முத்தியெனத் தேறு"

என்பது முத்திநிச்சயம்.

சைவசித்தாந்தத்தினைப் புறச்சமயத்தவர்களுக்குக் கூறினால் அஃது அவர்கட்கு இருள்போலத் தோன்றுமாம். அஃதாவது ஒரு சிறுகூறாயினும் அவர்கட்கு விளங்காது. ஏனெனில், சைவ சித்தாந்தம், 'பதி, பசு, பாசம்' என்னும் முப்பொருள்களும் என்றும் உள்ளன என்றும், அவைகளில் பதியே ஏனைய எல்லாப் பொருள்கட்கும் தாரகம் என்றும் கூறும். இதனை, 'பதியாகிய கடவுள் என்ற ஒருபொருளோ அல்லது உடம்பிற்கு வேறாக ஓர் ஆன்மாவோ எங்கே யிருக்கின்றது? என்று வாதிக்கின்ற புறப்

புறச் சமயிகளும், 'உயிருக்கு வேருகக் கடவுள் என்ற ஒரு பொருள் இல்லை' என வாதிக்கும் புறச்சமயிகளில் ஒரு சாராரும் எங்ஙனம் உணரமுடியும்!

இனி, உயிர்களின் இயல்புகளையே இறைவன் இயல்புகளாகக் கொண்டு விவகரித்துவரும் புறச்சமயிகளில் மற்ருெரு சாரார், பதிலக்கணங்களை முற்றவுடைய சைவசித்தாந்தக்கடவுளாகிய தேவதேவன் சிவன் பெருந்தன்மையை உணர்தல் அரிதேயாம். அகப்புறச் சமயிகள் சிவனைக் கோரமூர்த்தியாக நினைத்து உருத்திர பேதங்களை வழிபடுதலின், அவர்கள் 'சிவம் சாந்தம்' என்னும் நிலையினை உணர்ந்து, பரம கருணாமூர்த்தியாகிய பரமசிவனை உணரமாட்டார். ஆகவே, முக்கூற்றுப் புறச்சமயிகட்கும் சைவசித்தாந்தம் ஓர் இருள்போலத்தான் தோன்றும்.

அகச்சமயத்தவர்கள் முப்பொருள்களின் உண்மைகளையும் அவற்றின் இயல்புகளையும் பெரும்பான்மையும் உணர்ந்து சிறுபான்மையே உணராதுவிடுதலால், அவர்களுக்குப் பதி பசு பாசங்களின், 'தடத்த லட்சணம்' எனப்படும் பொதுவியல்பு விளங்கும்; 'சொருப லட்சணம்' எனப்படும் உண்மை இயல்பு விளங்குதல் இயலாது. எனவே, அவர்கட்குச் சைவசித்தாந்தம் ஒளிபோல்வதாகும் என்கின்றது சிவப்பிரகாசம். அஃதாவது, இருளில் ஒன்றுமே தோன்ருது; ஆனல், ஒளி வந்தபொழுது பொருள்கள் பொதுவாகக் காணப்படும். அவைகள் இன்ன தன்மையை உடையன என்பது தோன்ருது; அதை உணர்வதற்குத் தனி அறிவுவேண்டும். அதுபோல, அகச் சமயத்தவர்களுக்குச் சைவசித்தாந்தம் பொதுவாக விளங்கும்; சிறப்புவகையில் விளங்குதல் அரிதாகும்.

பொருள்களின் இயல்புகளை மிக நுட்பமாக ஆராய்ந்து வெளியிடுகின்றவர்கள் தாங்கள் என்று தார்க்கிகர்கள் தங்களைச் சொல்லிக்கொள்கின்றனர், அவர்கள் கொண்ட பிரமாணத்திற்கும் பிரமாணமாய் இருப்பது சைவசித்தாந்தம். அஃதாவது, தார்க்கிகர் கண் முதலிய சடமாகிய கருவிகளையே ஆன்மாவிற்குப் பிரமாணமாகக் கூறுவர்; ஆனல், சைவசித்தாந்தம், அக்கண் முதலிய பொறிகளையும் அளப்பது ஆன்மாவின் அறிவேயாகலின், ஆன்மசிற்சத்தியே ஆன்மாவிற்குப் பிரமாணம் என்

கின்றது. இதனையே, "புகல் அளவைக்கு அளவாகி" என்னும் தொடர் விளக்குகின்றது.

இனி, அத்துவித ஞானமே நிட்டைக்கு வழி என்பது, வைதிக மதங்கள் எல்லாவற்றிற்கும் உடன்பாடு. ஆயினும், 'அத்துவிதம்' என்பது, பொன்னும் பூஷணமும்போலக் கடவுளும் உலகமும் ஒன்று என்று ஒருசிலரும், இருளும் ஒளியும் போல வேறு என்று மற்றும் சிலரும், சொல்லும் பொருளும் போல, ஒன்றும் வேறும் என்று வேறு சிலரும் சொல்லுவன வற்றையும், அவையெல்லாம் அல்ல, அத்துவிதம் என்பதன் பொருள் என்பதையும், இச் சிவப்பிரகாசச் செய்யுள்தான் எடுத்துக் கூறுகின்றது. அதுவே, "பொற்பணிபோல் அபேதப் பிறப்பிலதாய், இருள்வெளிபோற் பேதமும் சொற்பொருள் போல் பேதாபேதமும் இன்றி" என்னும் தொடர்.

'அத்துவிதமாவது, மேற்சொல்லியவாறெல்லாம் இல்லாமல், இறைவன் உயிர்களோடும், உலகத்தோடும் ஒன்றாய் வேறாய் உடனாய் இருக்கும் நிலையே' என்பதை, "ஈறாய் முதல் ஒன்றாய்" என்னும் திருஞானசம்பந்தர் தேவாரத்தில், "எட்டுத்திசை தானாய், வேறாய் உடன் ஆனான் இடம் வீழிம்மிழலையே" என்றும், சிவஞானபோதத்துள், "அவையே தானேயாய்" என்றும், "காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்" என்றும், சிவஞானசித்தியாரில், "உலகெலா மாகி வேறாய் உடனுமாய்" என்றும், "உருவொடு கருவியெல்லாம் உயிர் கொடு நின்று வேறாய் வருவதுபோல" என்றும் கூறியிருப் பினும், மூன்றிற்கும் மூன்று உதாரணங்களை எடுத்துக்காட்டி அத்துவிதத்தை இனிது விளக்குவது, இச் சிவப்பிரகாசச் செய்யுள் ஒன்றே. அஃதாவது,

"உடலுயிர் கண்ணருக்கன் அறிவொளிபோல் பிறிவரும் அத்துவிதமாகும்" என்னும் விளக்கம் மேற்காட்டிய செய்யுளிலே தான் காணப்படுகின்றது. இதனையே, "உடல் உயிர்போல் கலப்பினால் ஒன்றாய், கண்ணொளியும் ஞாயிற்றின் ஒளியும் போலப் பொருள் தன்மையால் வேறாய், கண்ணொளியும் ஆன்ம போதமும்போல உயிர்க்கு உயிராதல் தன்மையால் உடனாய் என்று, சிவஞான போதச் சிற்றுரை பேருரைகளில் காண்கின்றோம். இதுவே, சைவசித்தாந்தத்துள் சொல்லப்படும்

சுத்தாத்து விதம். சுத்தாத்து விதத்தைத் தாயுமானர், "**புனித மெனும் அத்துவிதம்**" என்றும், அந்த மெய்யைக்கண்டவரே. மெய்கண்டார் என்றும் கூறுகின்ருர்.

இந்தச்சுத்தாத்துவிதமே வேதாந்தத்தின் தெளிவு என்பதை விளக்குவது சைவசித்தாந்தம் என்பதை "**வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத்திறன்** இங்குத் தெரிக்கலுற்ரும்" எனக்கூறுவதை மேல் உள்ள செய்யுளில் காண்கின்ரேம்.

இவ்வாறு வேதாந்தத்தைத் தெளிவது எல்லோர்க்கும் வாய்ப்பது அரிது; அதற்கு முன்னைப் பிறப்புக்களில் செய்த சிவபுண்ணியம் வேண்டும். அதன் பயனுகத்தான் சைவசித்தாந்த ஞானம் உண்டாவதாகும். இதனை, "**பெருநூல் சொன்ன அறத்திறனுல் விளைவதாய்**" என்கின்றது சிவப்பிரகாசம். பெரு நூல், சிவாகமங்கள்; அவற்றிற் சொல்லப்பட்ட அறம்; சிவபுண்ணியம். அதனுல் விளைவதே சித்தாந்த ஞானம்.

சிவபுண்ணியமாகிய பதி புண்ணியத்தைச் செய்யாது பசு புண்ணியங்களைச் செய்தோர் வேதத்தின் சிறந்த பயனைக் கொள்ளமாட்டாது, சாதாரண பயன்களையே கொண்டு மன நிறைவு பெறுவார்கள் என்பதனையே குமரகுருபரர், 'வேதம்' என்னும் பாதபத்துள்,

**"இலைகொண் டுவந்தனர் பலரே ; இலையொரீஇத்**
**தளிர்கொண் டுவந்தவர் பலரே ; தளிரொரீஇ**
**அரும்பொடு மலர்பிஞ்சு அருங்காய் என்றிவை**
**விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே"**

எனக் கூறி,

**"ஒரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த**
**ஆரா இன்ப அருங்கனி பிழிந்து**
**சாரங் கொண்ட சைவசித் தாந்தத்**
**தேனமு தருந்தினர் சிலரே"**

என்று சைவசித்தாந்தத்தின் அருமையை விளக்கிஞர். அந்தசாரம் கொண்ட சைவ சித்தாந்தத் தேனமுது, இச்சிவப்பிரகாசச் செய்யுளில்தான் ததும்பி வழிகின்றது.

இன்னும் இச்சிவப்பிரகாசத்துள் இவ்வாறு எடுத்து விளக்கப்பட்டுள்ள அரிய பெரிய கருத்துக்கள் எத்துணையோ உள்ளன. 'அபரஞானம், பரஞானம்' என ஞானம் இரண்டு வகைப்படும் என்பதை,

"........உயர் ஞானம் இரண்டாம் மாறு
மலம் அகல அகலாது மன்னு போதத்
திருவருள்ஒன்று; ஒன்றுஅதனைத் தெளிய ஓதும்
சிவாகமம் என்று உலகறியச் செப்பும் நூலே"

என்பதிற் காண்கின்றோம். இன்னும், சைவ சித்தாந்தப்பொருள் 'பொது' என்றும், 'உண்மை' என்றும் இரண்டாக வகுத்துச் சொல்லப்படும் என்பதையும் சிவப்பிரகாசந்தான் நமக்குத் தெளிவுற விளக்குகின்றது. வினைகள் வந்து பயன்தரும் முறை, கேவல சகல சுத்தம் என்னும் அவத்தைகளின் இயல்பு. குணங்களின் விரிவு, புத்தி குண பாவங்கள், ஞான வாய்மை. ஞான வாய்மையின் பயன் இவைகளையெல்லாம் நாம் சிவப்பிரகாசத்திலே தான் உணர முடியும். இன்னும் அகச்சந்தான புறச்சந்தான பரம்பரை, நூல்வழி இவைபோன்ற மரபுகளுக்கும் சிவப்பிரகாசமே ஆதாரமாய் நிற்கின்றது.

சிவஞான போதத்தால் சிவஞானம் போதிகப்பெறுகிறது. அப் போதனையைப்பெற்ற பின்பு சிவஞான சித்தியால் அந்த ஞானம் சித்தியாகும். சிவஞானம் சித்தித்ததன் பயன் சிவம் பிரகாசிப்பதே. ஆதலின், அந்தச் சிவப் பிரகாசத்தை இச் சிவப்பிரகாசமே தருவதாகும். சிவப்பிரகாசத்தை உண்டாக்கும் என்பதற்கு ஏற்ப, இந்நூலின் காப்புச் செய்யுளே, "ஒளியான திருமேனி" என்று தொடங்குவதைக் கண்டு நாம் மகிழா திருத்தல் இயலாது.

இத்துணை அரும்பெருங் கருத்துக்கள் அமைந்த இந்நூல் நூறே செய்யுளால் ஆக்கப்பட்டிருத்தல் பெரிதும் போற்றுதற்கு உரியதாம். "வளர் விருத்தம் நூறும் ஆசில் சிவப்பிரகாசம் ஆகும் அன்றே" என்று ஆசிரியரே கூறுகின்றார். காப்புச் செய்யுள் நீங்கலாக, இந்நூலில் உள்ள செய்யுட்கள் ஒரு நூறே, இதன்கண் தெரித்துரைக்கப்பட்ட பொருள்களோ பல. ஆகவே, இந்நூலினை உலகம் நன்கு ஓதி யுணர்ந்து சிவம் பிரகாசிக்கப் பெறுவதாக.

உ

திருத்தருமையாதீனத்தில் எழுந்தருளியிருக்கும்

# ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி ஸ்துதி

திரு. K. R. சுப்பிரமணியம்

ஆசிரிய விருத்தம்

சிம்ஹவா கனிரத்ன சிம்ஹாச னீசூர்ய
தேஜோம யாம்ஸ துவிதாம்
திவ்யகுண் டலகர்ண மகுடசிர சந்த்ரவிக
சிதவதன நயன கருணி
அம்புஜாம் புஜரூபி அமிர்தசா கரஜெனனி
அத்யாத்ம கனக வல்லீ
ஆர்த்தராம் பரதாரி ஹம்ஸஸோ ஹம்ஸாம்ச
ஆகமசு சீல தருணி
சம்ரம சுலக்ஷவி ஸேஷாதி குணசித்ர
சர்வார்த்த கார்யாம் ஸனி
சங்க்ரம வசுரசிர சேதனிம காருத்ரி
ஜயமால்ய சோம ளாங்கி
அம்ஸதள கோகனத டாகபரி மளரம்ய
அணிதர்ம புரவா சினி
அஷ்டாதச புஜமகா லக்ஷிமிதுர்க் காதேவி
அம்புஜப தம்ந மாமி.

சர்வத்ர சுரபூஜி தாயகரு ணகரிவி
சாலாட்சி மகேஸவரி
சாம்பவ்யை திரிநேத்ர தாரிசத் துருநாச
சக்ரதிரி புரசுந்தரி
பர்வதசு புத்ரிஜெய ராஜரா ஜேஸ்வரீ
பாசாங்கு சாஸ்த ரூபி
பகுமால்ய ரஞ்சனீ பத்மஜன னீஸ்வர்ண
பரிபுரப தாலங் கிர்த
வர்த்தனிம காராஜ்ய வாஞ்சிதகிர் பாகரீ
வர்ணனிசு லக்ஷணம்ஸ
வர்க்கஸ்ய வடிவப்ர திஷ்டாய சுந்தர்ய
வாதான்ய சுகுணதேவி
அர்த்தசசி சேகரகி ரீடப்ர காசினீ
அணிதர்ம புரவா சினி
அஷ்டாதச புஜமகா லக்ஷ்மிதுர்க் காதேவி
அம்புஜப தம்ந மாமி

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.
திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.

( மலர் 23, இதழ் 5, பக்கம் 300 இன் தொடர்ச்சி )

## பதியின் போதுவியல்பு

### முதல்வனது தொழிலின் பயன்

மாணுக்கன் : அவயவப் பகுப்பு உடைமையாலும், சடமாத லோடு பலவாதலாலும், சுட்டியறியப்படுதலாலும் உலகம், தோன்றி நின்று அழியும் காரியப்பொருள் என்பதும். அதனுல் அதனைக் காரியப்படுத்தும் முதல்வன் ஒருவன் உளன் என்பதும், அம்முதல்வன் அழித்தற் கடவுளே என்பதும் அருளினீர்கள். ஆகவே, 'முதற்கடவுள், 'படைத்தல், காத்தல், அழித்தல்' என்னும் முத்தொழிலைச் செய்கின்ருன்' என்பது பெறப்பட்டது. அதனுல், அத்தொழில்களை அவன் யாது பயன் கருதிச் செய் கின்ருன் ? என்ற விஞ எழுகின்றது அன்ருே ! அதற்கு அடிகள் விடையளித்தருளல் வேண்டும்.

ஆசிரியர் : இறைவன் யாதொரு குறையும் இல்லாதவன் ஆதலின், அவன் எதற்குத் தொழில் செய்யவேண்டும்? அதுவும், ஒரு தொழில் அன்று; முத்தொழில் ஏன் செய்ய வேண்டும் ? என்ற விஞவிற்குச் சிலர், 'அவை அவனுக்கு விளையாட்டு' என்பர். அஃதாவது, பேராற்றல் உடைய பெரி யோன் இறைவனுகலின், அவ்வாற்றலால் எவையேனும் செய் வதுதான் அவனுக்கு இயல்பு; அதற்கு ஒருபயன் இருக்க வேண்டும் என்பது இல்லை என்கின்றனர். இது பொருந்துவது அன்று ; ஏனெனில், உலகம் தோன்றி நின்று அழியும் செயல் களுக்கு இடையில் அகப்பட்டு எத்துணை உயிர்கள் எத்துணைத் துன்பம் உறுகின்றன ! இத்துணைப் பெருந் துன்பத்திற்குக் காரணமான செயல்களை, யாதொரு குறிக்கோளும் இன்றி, பேரறிவுடைய பெரியோனுகிய இறைவன் இடையருது செய்து கொண்டிருக்கிருன் என்றல் எங்ஙனம் பொருந்தும் ? அன்றியும், எந்தத் தொழிலும் பயன் தராமற்போதல் இல்லை. படைத்தல் முதலியவற்ருல், உயிர்கட்குத் துன்பம் விளைதலைக் கண்டோம்.

இத்தொழில்கள் இறைவனுக்கு விளையாட்டு என்றால், அவனுக்கு இன்பம் விளைப்பதாயும், பொழுதுபோக்காயும் அமைதலாகிய பயனைத் தருகின்றது என்பதுதானே பெறப்படுகின்றது. ஆகவே, தன்னலத்தின் பொருட்டுப் பிறரைத் துன்புறுத்துகின்றான் என்ற ஒன்று, மேற்காட்டியவிடையினால் உண்டாகின்றது. ஆகவே, அது விடையன்றாம்.

மாணாக்கன் : அங்ஙனமாயின், "காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி" என்றாற்போல, அருள்மொழிகள் முத்தொழிலை, இறைவனுக்கு, 'விளையாட்டு' என்று அருளுதல் என்னை ?

ஆசிரியர் : ஆம்; 'விளையாட்டு' என்று கூறுதல் உண்மைதான். அதற்கு, 'சிறுபிள்ளைகள் குறிக்கோள் ஒன்றும் இன்றிப் பொழுதுபோக்கும் விளையாட்டுப் போன்றது' என்பது கருத்தன்று; மிகப் பெரிதாகிய உலகத்தைத் தொழிற்படுத்துவது மிகப் பெரிய தொழிலாயினும், பேராற்றலுடைய பெரியோனாகிய முதல்வனுக்கு, அஃது ஒரு விளையாட்டுப்போலச் சிறிதும் வருத்தம் இன்றி, மிக எளிதில் செய்யப்படுவதேயாம் என்பதே கருத்தாகும். 'ஐங்கலப் பாரம் சுமத்தல் சாத்தனுக்கு விளையாட்டு' என்று கூறினால், அங்கு 'விளையாட்டு' என்பதற்கு, 'சிறுபிள்ளைகள் விளையாட்டு போன்றது' என்பது பொருளாகாது; 'எளிது' என்பதே பொருளாம். அதுபோலவே, இங்கும், 'விளையாட்டு என்றல், 'எளிது' என்னும் கருத்தினாலேயாம்.

மாணாக்கன் : அவ்வாறாயின் முதல்வன் செய்யும் தொழில்களால் விளையும் பயன் என்னை ?

ஆசிரியர் : உயிர்கள், 'இம்மை, மறுமை, வீடு' என்னும் நலங்களைப் பெறுதலே, முதல்வனது தொழில்களின் பயனாகும், "ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின் உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்" என்றாற் போலும் திருமொழிகளே அதற்குச் சான்றாகும். ஆகவே, 'உயிர்களை உய்விக்க வேண்டும் என்னும், கைம்மாறுகருதாக் கருணையே முதல்வன் தொழில்செய்தற்குக் காரணம்' என்பது பெறப்பட்டது.

மாணாக்கன் : இறைவன் செய்யும் தொழில்கள் உயிர்களின் 'இம்மை மறுமை வீடு' என்னும் நலங்கட்கு எங்ஙனம் காரணமாகின்றன ?

ஆசிரியர் : முன்பு கூறிய சற்காரிய முறைப்படி பார்க்கும் பொழுது, எங்கும் எப்பொழுதும் இல்லாத ஒரு பொருள்,

எக்காலத்தும் யாராலும் படைக்கப்படுதல் இல்லை. ஆகவே இறைவன் உயிரையோ உலகத்தையோ புதுவதாகப் படைத்தல் இல்லை. (இங்கு, 'உலகம்' என்பது சட உலகத்தைக்குறிக்கும்.)

உலகம்சடம் (அறிவில்லாதது) உயிர் சித்து(அறிவுடையது) நன்மைதீமைகள் அறிவுடைய பொருளுக்கன்றி, அறிவில் லாத பொருளுக்கு இல்லை. ஆகவே, அறிவில்லாத உலகத்தை அறிவுடைய உயிருக்கு உதவியாகும் வகையில் அமைத்து, அவ் விரண்டினையும் ஒன்றுபடப் பிணைத்துவைப்பதே, 'படைத்தல்' எனப்படுவதாம்.

'உயிர்களுக்கு உதவியாகும் வகை' என்பது, அவைகள் விரும்பும் விருப்பம். அவ்விருப்பம் எண்ணிறந்து இருப்பினும்; அவை, 'இம்மை, மறுமை, வீடு' என்னும் மூன்றில் அடங்கும். சில உயிர்கள் இம்மை இன்பத்தை விரும்பும்; சில உயிர்கள் மறுமை இன்பத்தை விரும்பும்; சில உயிர்கள் வீட்டின்பத்தை விரும்பும். இவைகளை உடம்பின்றி உயிர்கள் அடைதல் இயலாது. ஆகவே, 'எந்த இன்பத்தை' எந்த உயிர் விரும்புகின்றதோ அந்த இன்பத்தை அடைதற்குரிய உடம்பு முதலிய வற்றை அந்த உயிருக்கு அமைத்துக் கொடுத்தலே படைப்பு என்பதாகின்றது. "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்ற அப்பர் திருமொழியையும் காண்க.

'உலகம் காரியப் பொருள்' என்பதும் இதற்கு முதற் காரணம் மாயை என்பதும் முன்னே கூறினோம். ஆகவே, 'மாயை யாகிய முதற்காரணத்திலிருந்து, உலகமாகியகாரியப் பொருளைத் தோற்றுவித்து உயிர்களுக்குக் கூட்டு விப்பதே படைத்தல்' என்று உணர்க.

மாயையாகிய சடப்பொருளிலிருந்து, தோற்றுவிக்கப்படும் சடமாகிய உலகம், 'தனு, கரணம், புவனம், போகம்' என நான்கு வகைப்படும். தனு-உடம்பு. கரணம் - மனம் முதலிய உட்கருவிகள். புவனம் - உலாவும் இடம். போகம் - நுகர்ச்சிப் பொருள். இவை முன்பும் கூறப்பட்டன.

இறைவன் உயிர்களை ஒருவகையாகவே படையாமல், பல வகை வேற்றுமைகள் அமையப்படைத்தது ஏன்? என்ற வினா எழுவதும், 'அதற்கு அவற்றின் வினைகளுக்கு ஏற்பப் படைத்தான்' என விடையிறுத்தலும், நம் சமய நூல்களில் எங்கும் காணப்படுவனவேயாம். அந்த வினையென்பது மேற்சொல்லிய விருப்பமேயாம். எனவே, விருப்பத்திற்கு ஏற்ப படைத்தலால், வினை நீங்குதற்குரிய வழியை அடைவிப்பது பயனாயிற்று.

கொடுத்த தனு கரண புவன போகங்களை அழியாமல் நிறுத்திப் பயன்படச் செய்வதே காத்தல். ஆதலின், உயிர்கள் தம் விருப்பத்தை நிறைவித்துக் கொள்வதற்குக் கூட்டிய வழியில் நின்று, அதனை அங்ஙனமே நிறைவித்துக் கொள்ளத் துணை செய்தலே காத்தலாதலின், வினை நீக்கத்திற்கு உரித்தாகிய வழியில் நின்று, வினை நீங்கப் பெறுதலே, காத்தலின் பயனாயிற்று.

இம்மை, மறுமை உலகங்களில் ஆங்குள்ள இன்பங்களை நுகர்வதற்குரிய உடம்புகளை எடுத்துப் பிறந்து, பின் இறந்து உழலும் நிலையினின்றும் நீங்கிச் செயலற்றிருக்குமாறு தனு கரண புவன போகங்களைப் பிரித்து விடுதலே அழித்தலாம். ஆதலின், பிறப்பு இறப்புக்களில் உழன்ற இளைப்பு நீங்குதலே அழித்தலின் பயனாயிற்று. இவ்வாறு இறைவனது முத்தொழிலும் உயிருக்கும் பயன்படுமாற்றை அறிக.

மாணுக்கன் : நன்குணர்ந்தேன். 'படைத்தல், காத்தல், அழித்தல்' என்னும் முத்தொழில்களோடு 'மறைத்தல், அருளல்' என்னும் வேறு இரண்டு தொழில்களையும் இறைவன் செய்வதாக முன்னே அருளினீர்கள் ; அவற்றின் பயன்கள் யாவை ?

ஆசிரியர் : உயிர்களின் அறிவை மறைப்பது ஆணவ மலமே. அதன் மறைக்கும் ஆற்றலைத் தூண்டி, மாயை கன்மங்களால் உலக இன்பத்தைத் தோற்றுவித்து இறைவன் உயிர்களுக்குத் தன்னைக் காட்டாது உலகத்தையே நோக்கியிருக்கச் செய்தலே மறைத்தலாம். இச்செயலால், ஆணவ மலத்தின் சத்தி நாளடைவில் ஒடுங்கிவிடும். அதுவே, மறைத்தல்தொழிலின் பயனாகும்.

ஆணவ மலத்தின் சத்தி ஒடுங்கியபொழுது உயிர்களுக்கு இறைவனை அடையும் விருப்பம் நிகழும். அப்பொழுது இறைவன் தன்னைக் காட்டி, உயிர்களை மலங்களினின்றும் நீக்கித் தன்னை அடைவித்தலே அருளலாகும். ஆகவே, இறைவன் திருவடியின்பமாகிய பேரின்பத்தைப் பெறுதலே அருளல் தொழிலின் பயனும். இவ்வாற்றல் இறைவனது ஐந்தொழில்களும் உயிர்களின் பொருட்டே செய்யும் அருட்டொழில்களே என்பதும், ஒன்றேனும் அவன் பொருட்டோ அல்லது கொடுந்தொழிலோ அன்று என்பதும், நன்குணர்ந்து கொள்க.

மாணுக்கன் : நன்கு தெளிவித்தீர்கள்; இம்மை மறுமை இன்பங்களுக்கேயன்றி வீட்டின்பத்திற்கும் தனு, கரணம் முதலியன வேண்டுமோ ?

ஆசிரியர் : வீட்டின்பத்தை அடைந்தபின்னர் அதனை நுகர்தற்குத் தனுகரணம் முதலியனவேண்டா; ஆயினும், அதனை அடையும் நெறியிற் செல்வதற்குத் தனுகரணம் முதலியன இன்றியமையாதனவேயாம். ஆதலின், வீட்டின்பத்தை வேண்டுவோர்க்கும் அதனை அடைதற்பொருட்டு இறைவன் அதற்கு உரிய தனு முதலியவற்றைக் கொடுத்தருளுவன்.

மாணுக்கன் : ஆம் ! நன்றேயருளினீர்கள். வணக்கம்.

# சங்க இலக்கியங்களில் சமயம்

வித்துவான். திருமதி. ப. நீலா

மக்களுடைய ஒழுக்கத்தை இரண்டாகப் பிரித்து அக வொழுக்கம் என்றும் புறவொழுக்கம் என்றும் பெயரிட்டனர். காதலுணர்ச்சியை அகம் என்றழைத்தவர்கள் வீரத்தன்மையைப் புறம் என்று கூறினர். காதலும் வீரமும் கொண்டு சிறந்த பண்டைத் தமிழ் மக்கள் கடவுளுணர்ச்சியிலும் ஒருமைப்பட்ட உயர்ந்த எண்ணம் கொண்டிருந்தனர். தாங்கள் வாழும் நிலங் களுக்கேற்ப கடவுளை அமைத்து வழிபட்டனர்.

" மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே "
(தொல் - பொ, 5)

என்று தொல்காப்பியனார் இக்கருத்தினையே கூறிச்சென்றார். முல்லை நிலத்தின் தெய்வம் திருமால். குறிஞ்சிக் கடவுள், முருகன் மருதநிலத் தலைவன் இந்திரன், நெய்தல்நில இறைவன் வருணன் என்று அறிகிறோம்.

இந்நிலங்களில் வாழ்ந்த மக்களின் பண்பாட்டினை விளங்கக் காட்டும் கண்ணாடிதான் சங்க இலக்கியங்கள் எனப்படும் மங்காத் தமிழ் நூல்கள். சங்க இலக்கிய நூல்களை இரண்டு பகுப்பாக்கினர் பைந்தமிழ்ப் புலவர் பெருமக்கள். ஒன்று எட்டுத்தொகை. மற்றொன்று பத்துப்பாட்டு ஆகும். எட்டுத் தொகை நூல்களையும் நினைவிலே கொள்ள ஒரு பாடல் உண்டு.

" நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு ஒத்த
பதிற்றுப் பத்(து) ஓங்கு பரிபாடல் — கற்றறிந்தோர்
ஏத்தும் கலியோ டகம் புறமென்
றித்திறத்த எட்டுத் தொகை ".

பத்துப் பாட்டு நூல்களையும் வரிசைப் படுத்துகிறது ஒரு பாடல்

" முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி — மருவினிய
கோல நெடுநல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து "

பத்துப்பாட்டின்கண் முதலில் அமைந்த திருமுருகாற்றுப்படை - பதினோராம் திருமுறையிலும் அமைந்து பெருமை பெற்றது.

இதன்கண் முருகனின் திருவுருவச் சிறப்பு, ஊர்தியின் பெருமை, அருள் காட்சி வழங்கும் அருமை ஆகியவைகள் கூறப் படுகின்றன.

சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றிய பொறி களை ஐம்பூதங்களுள் ஒருவனான அக்னிபகவான் கையில் ஏந்தி சரவணப் பொய்கையில் விட - ஆறு குழந்தைகளாகி முருகன் கார்த்திகைப் பெண்கள் அறுவரின் பாலுண்டு வளர்ந்தான். உமை தனது திருக்கரங்களால் ஆறு குழந்தைகளையும் ஒருசேர அணைத்தெடுத்தாள். ஆறுமுகன் ஆனான் முருகன், இதனை, திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ் அழகுறச் சொல்லுகிறது

கலைப் பால் குறைந்த பிறை முடிக்கும்
கடவுள் உடலின் விளை போகம்
கனலிக் கரத்தில் அளிக்க அந்தக்
கனலி பொறுக்க மாட்டாமல்
மலைப் பால் விளங்கும் சரவணத்தில்
வந்து புகுத ஓராறு
மடவார் வயிறு சூல்உளைந்து
மைந்தர் அறுவர் பயந்தெடுப்பக்
கொலைப் பால் விளங்கும் பரசுதரன்
குன்றில் அவரைக் கொடுசெல்ல
கூட்டி அணைத்துச் சேர
ஒரு கோல மாக்கி கௌரிதிரு
முலைப் பால் குடித்த கனிவாயால்
முருகா முத்தந் தருகவே
முத்தம் சொரியும் கடல் அலைவாய்
முதல்வா முத்தந் தருகவே.

நக்கீரர் பெருமான் இவ்வரலாற்றைத் தான்

" ஐவருள் ஒருவன் அங்கை யேற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ "

என்று சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறார்.

இப்படி முருகன் திருப்பரங்குன்று, திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை ஆகிய இடங்களில் எழுந்தருளி காட்சி தருகிறான் என்கிறது முருகாற்றுப்படை,

செவ்வேள் - வண்டுகள் மொய்க்காததும், ஒளி வீசுவதுமான காந்தள் பூவினாலாகிய கண்ணியை அணிந்துள்ளானும். இவனுடைய ஊர்தி மயிலும் யானையும் ஆகும். ' பிணிமுக ஊர்தி ஒண் செய்யோன் ' - என்று இவனுடைய யானை புறநானூற்றில் குறிக்கப்படுகிறது.

புரையுநர் இல்லாப் புலமையோனாக - நக்கீரரின் திருமுருகாற்றுப் படையில் முருகன் விளங்குகிறான்.

செம்மேனி அம்மானை சிவபிரானையும் சங்ககாலப் புலவர்கள் பாடத் தவறவில்லை. எட்டுத் தொகையுள் ஒன்றான அகநானூற்றில் கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ள ஒரு பாடலில் இறைவனது திருவுருவம் எவ்வாறு வருணிக்கப்படுகிறது என்பதனைக் காணலாம்.

" கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தாரன் மாலையன் தைதந்த கண்ணியன்
மார்பினஃதே மையில் நுண்ஞாண்
நுதல திமையா நாட்டம இகலட்டுக்
கையது கணிச்சியொடு மழுவே மூவாய்
வேலும் உண்டத் தோலா தோற்கே
ஊர்ந்தது ஏறே சேர்ந்தோள் உமையே
செவ்வான் அன்ன மேனி அவ்வான்
இலங்கு பிறையன்ன விளங்குவால் வையெயிற்று
எரியகைந்தன்ன அவிர்ந்து விளங்கு புரிசடை
முதிராத் திங்களொடு சுடரும் சென்னி
மூவா அமரரும் முனிவரும் பிறரும்

யாவரும் அறியாத் தொன்முறை மரபின்
வரிகிளர் வயமான் உரிவை தைஇய
யாழ்கெழு மணிமிடற் றந்தணன்
தாவில் தாள் நிழல் தவிர்ந் தன்றால் உலகே ''

கொன்றைப் புதுமலரால் ஆகிய மாலைகளையும், கண்ணியையும் அணிந்தவன். மார்பிலே மாசற்ற நூல் விளங்கும். நெற்றியிலே இமையாத கண்ணும், கைகளிலே மழு, கணிச்சி, வேல் இவைகளும் உண்டு. ஊர்தி ரிஷபம் - அருகில் உமையவள், தீபோன்ற சிவந்த சடையில் முதிரா வெண் திங்கட் குழவி இலங்கும், வலிமை பொருந்திய புலியதளை ஆடையாகக் கொண்டவன் என்று கூறும் இப்பாடல் மூலம் சிவபிரானின் திருவுருவம் நம் மனத்துள் பதியும் அழகே அழகு.

எல்லாம் வல்ல பரம் பொருளை 'கடவுள்' - என்ற சொல்லால் குறித்தனர் தமிழ் பேசும் தண்கடல் வரைப்பில் வாழ்ந்த மக்கள்.

பாணன் ஒருவன் தலைவனாக விளங்கும் புரவலன் ஒருவனைக் காணச் செல்லும்பொழுது பல தீய சகுனங்கள் தோன்றுகின்றன. உடனே அவனுள்ளம் 'கள்ளி நீழற் கடவுளை' - வாழ்த்துகிறது. இதனைப் புறநானூற்றில் நாம் காணலாம். எண்ணியது முடிய வேண்டும் என்று இறைவனைத் தொழும் வழக்கம் உண்டு என்பதனைச் சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

'' பயன் தூக்கார் செய்த வுதவி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது ''

என்பார் வள்ளுவப் பெருந்தகையார். தமிழ்த் தொண்டு செய்த ஒளவைப் பாட்டிக்கு அருங்கனியாம் நெல்லிக்கனி ஒன்றைக் கொடுத்தான் அதியன். ஒளவை வாழ - தமிழ் வாழும் என்று எண்ணிய அவனுள்ளப் பாங்கு அறிந்து மகிழ்தற்குரியது ஒளவை அவனை வாழ்த்துகிறாள்.

'' நீல மணிமிடற் றொருவன் போல மன்னுக பெரும ''

என்று முழுமுதற் பரம் பொருளாம் சிவனது பெருமை அங்கே நினைவூட்டப் பெறுகிறது. (தொடரும்)

# தொல்காப்பியச் சொல்லதிகார - - விளக்கக் கட்டுரைகள்.

பண்டித வித்துவான், திரு. கு. சுந்தரமூர்த்தி

( மலர் 23, இதழ் , 6 பக்கம் 340 இன் தொடர்ச்சி )

(1) இயற்பெயர்: காரணம் கருதாது சத்தன், கொற்றன் என ஒருவர்க்கு இயல்பாக இட்டு வழங்கும் பெயரே இயற்பெயராகும். இதனை 'முதற்பெயர்' என்பர் தெய்வச்சிலையார். இது பெண்மை இயற்பெயர், ஆண்மை இயற்பெயர் என நான்கு வகைப்படும் (22).

(2) சினைப்பெயர்: உறுப்பினைக் குறிக்கும் பெயர் சினைப்பெயராகும். அது பெண்மைச் சினைப்பெயர், ஆண்மைச் சினைப்பெயர், பன்மைச் சினைப்பெயர், ஒருமைச் சினைப்பெயர் என நான்கு வகைப்படும் (23).

(3) சினைமுதற் பெயர்: உறுப்போடு கூடிய முதற்பெயரைச் சினைமுதற் பெயர் என்பர். பெருங்கால் யானை என்புழி பெருங்கால் என்னும் சினையும், அதனையடுத்து யானை என்னும் முதலும் ஒருங்கு வந்தது காண்க. அது பெண்மை சுட்டிய சினைமுதற் பெயர், ஆண்மை சுட்டிய சினைமுதற்பெயர், பன்மை சுட்டிய சினைமுதற் பெயர், ஒருமை சுட்டிய சினைமுதற் பெயர் என நான்கு வகைப்படும் (24).

(4) முறைப்பெயர்: ஒருவரோடு ஒருவர்க்குப் பிறப்பினால் உளதாகும் முறைமை பற்றி வரும் பெயர் முறைப்பெயராகும். அது ஆண்மை முறைப்பெயர், பெண்மை முறைப்பெயர் என இருவகைப்படும் (25). இவற்றையே.

" ஆண்மை பெண்மை ஒருமை பன்மையின்
ஆமந் நான்மைகள் ஆண் பெண் முறைப்பெயர் "

(பெய: 26)

என நன்னூலாரும் அழகாகத் தொகுத்துக் கூறுமாறு காண்க

(1) பெண்மை சுட்டிய பெயர் : இது உயர்திணை அஃறிணை ஆகிய இருதிணையிலும் வரும் பெண்மையை உணர்த்துதலின் இப்பெயர் பெற்றது. பெண்மை சுட்டிவரும் பெண்மை இயற் பெயர், பெண்மைச் சினைப்பெயர், பெண்மைச் சினைமுதற் பெயர், பெண்மைமுறைப் பெயர் ஆகிய நான்கும் உயர்திணை, அஃறிணை ஆகிய இருதிணையிலும் வரும் பெண்பாற்கு உரியதாம் (26).

(2) ஆண்மை சுட்டிய பெயர்: இது உயர்திணை அஃறிணை ஆகிய இருதிணையிலும் வரும், ஆண்மையை உணர்த்துதலின் இப்பெயர் பெற்றது. ஆண்மை சுட்டி வரும் ஆண்மை இயற் பெயர், ஆண்மைச் சினைப்பெயர், ஆண்மைச்சினைமுதற் பெயர், ஆண்மை முறைப்பெயர் ஆகிய நான்கும் உயர்திணை, அஃறிணையாகிய இருதிணையிலும் வரும் ஆண்பாற்கு உரியதாம் (27).

(3) பன்மை சுட்டிய பெயர் : இது உயர்திணை அஃறிணை யாகிய இருதிணையிலும் வரும் பன்மையை உணர்த்துதலின் இப்பெயர் பெற்றது. எனவே, பன்மை இயற்பெயர், பன்மைச் சினைப்பெயர், பன்மைச் சினைமுதற் பெயர் ஆகிய மூன்றும் உயர்திணை, அஃறிணையாகிய இருதிணையிலும் வரும் பன்மையைக் குறிக்கும் என்பதாம்.

இங்ஙனமன்றி, ஒரு சில பன்மை சுட்டிய பெயர்கள் அஃறிணை ஒருமை, அஃறிணைப் பன்மை, உயர்திணை ஒருமை ஆகிய மூன்று பாலுக்கும் வருதலும் உண்டு இதனைத் தொல்காப்பியர்,

> " பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்
> ஒன்றே பலவே ஒருவ ரென்னும்
> என்றிப் பாற்கும் ஓரன் னவ்வே "

என்னும் நூற்பாவால் விளக்குகிறார். இந்நூற்பாவில் 'என்றிப் பாற்கும்' என்னும் உம்மை எச்சவும்மையாகும். இவ்வும்மை, பன்மை சுட்டிய பெயர் இருதிணையிலும் வரும் பன்மைகளைக் குறிப்பதே யன்றி மேற்கூறிய ஒன்று, பல, ஒருவர் ஆகிய மூன்று பால்களையும் குறிக்கும் என வருதலின், எச்சவும்மை யாயிற்று. இதுவே சிவஞான முனிவர் கருத்தாம்.

ஆனால் தொல்காப்பிய உரையாசிரியர்களோ இவ்வும்மையை முற்றும்மையாக்க் கொண்டு, பன்மை சுட்டிய பெயர் என்பது அஃறிணை யொருமை, உயர்திணை ஒருமை (ஆண், பெண்) ஆகிய பால்களையே குறிக்கும் என்றனர்.

ஆண்மைப் பெயர், பெண்மைப் பெயர் ஆகிய ஒவ்வொன்றும் இருதிணையிலும் வரும் ஆண்மை, பெண்மையையே உணர்த்த, இப்பன்மை சுட்டிய பெயர் மட்டும் பன்மையே யன்றி ஒருமையையும் உணர்த்தி வருகிறது. இது முற்கூறிய இலக்கணத்தில் பிறழ்ந்து வந்ததெனினும் சேனாவரையர் ஒருவாற்றான் அமைதிகூறுகின்றார். அது வருமாறு:

ஆண்மைப்பெயரை ஆண்மை சுட்டிய பெயர் உணர்த்துமே யன்றி ஏனைய பெண்மை சுட்டிய பெயர் உணர்த்த இயலாது. அதுபோல இப்பன்மைப் பெயரையும் பன்மை சுட்டிய பெயர் உணர்த்துமே யன்றி இதனைப்பிற பெயர்கள் உணர்த்த இயலா. ஆதலின் இது பன்மை சுட்டிய பெயராயிற்று. ஆண்மை சுட்டிய பெயர், பெண்மை சுட்டிய பெயர், ஒருமை சுட்டிய பெயர் ஆகிய மூன்றனும் உணர்த்த இயலாத பன்மையை இது உணர்த்துதலின் பன்மை சுட்டிய பெயர் என்பது இதற்குப் பொருந்துமேனும் அஃறிணை ஒருமை, உயர்திணை ஆண் ஒருமை பெண் ஒருமை ஆகிய மூன்று ஒருமைகளையும் இது உணர்த்துதல் வழுவேயாம். எனினும் வடநூல் இலக்கணம் பற்றி இதற்கும் அமைதி கூறப்படுகின்றது.

வட நூலுள் விசேடித்தல் என்ற இலக்கணம் ஒன்றுண்டு அது ஒரு பொருளைச் சிறப்பித்து நிற்கும் அடைமொழி என்று பொருள்படும். அது தன்னோடியையின்மை நீக்கிய விசேடணம் என்றும் பிறிதோடியையின்மை நீக்கிய விசேடணம் என்றும் இருவகைப்படும்.

தன்னோடியையின்மை நீக்கிய விசேடணம்:

விசேடணம்-அடைமொழி: இயையின்மை நீக்குதல்-இயை புடைமையைச் சுட்டுதல், எனவே ஒருபொருளை விசேடிக்கவந்த அடைமொழி, தனக்கும் பொருளுக்கும் உள்ள இயைபைமட்டும் சுட்டுமேல் அது தன்னோடியையின்மை நீக்கிய விசேடணமாம், ஈண்டு தனக்கு என்பது அடைமொழி தனக்கு என்பதாம். (எ-டு) 'வெண்குடைப் பெருவிறல் வழுதி' என்ற விடத்து வெண்குடையும் பெருவிறலும் (வெற்றியும்) அடைமொழிகளாய் வழுதியைச் சிறப்பிக்கின்றது. இவ்விரு அடைமொழிகளும் வழுதிக்கு வந்திருப்பது இவை பிற பேரரசர்களுக்கு இல்லை யென்பதை உணர்த்துதற்கு அல்ல; ஈண்டுக் கூறப்பட்ட வழுதிக்கு இவ்விரு இயல்புகளும் உள்ளன என்பதை மட்டும் சுட்ட வந்தனவாம். ஆதலின் இது தன்னோடியையின்மை நீக்கிய விசேடணமாம்.

பிறிதோடியைபின்மை நீக்கிய விசேடணம் :

ஒரு பொருளைச் சிறப்பிக்க வந்த அடைமொழி அப்பொருளுக்கு அச்சிறப்பு உண்டென்பதை மட்டும் குறிக்காது பிற பொருளுக்கு அச்சிறப்பு இல்லை என்பதையும் விலக்குமாறுல் அது பிறிதோடியைபின்மை நீக்கிய விசேடணமாம், (எ - டு) எனவே 'கருங்குவளை' என்றவிடத்து குவளை என்ற பொருளைச் சிறப்பிக்க வந்த கருமை என்ற அடைமொழி, இக்குவளை கருமையுடையது என்பதை மட்டும் குறியாமல் செங்குவளை போன்ற பிற குவளைமலர்களுக்கு இக்கருமை இல்லையென்பதையும் குறிப்பதால் இது பிறிதோடியைபின்மை நீக்கிய விசேடணமாம்.

இவ்விரு விசேடண இலக்கணங்களுள் பன்மை சுட்டிய பெயரென்பது தன்னோடியைபின்மை நீக்கிய விசேடணமாகும். 'பன்மை சுட்டிய பெயர்' என்ற விடத்து பன்மை சுட்டுதல் என்னும் அடைமொழி இப்பெயர் பன்மையை மட்டும் உணர்த்தும் என்பதன்றி பிற ஒருமைகளைக் குறிக்காது என விலக்காமையின் இது தன்னோடியைபின்மை நீக்கிய விசேடணமாம். நச்சினார்க்கினியரும் இங்ஙனமே கூறுவர்.

எனினும் இது ஓரளவு அமைதியாகுமேயன்றி உண்மையை நோக்குங்கால் பன்மை சுட்டிய பெயரென்பது இருதிணையிலும் வரும் பன்மையை மட்டுமே குறித்து வருதல் பொருந்துவதாகும். இத்தகைய நேர்மையான இலக்கணத்தை உம்மையால் தழுவியும், ஒருமையொடு பொருந்துதற்கு ஏலாத இலக்கணத்தை நூற்பாவால் எடுத்து விதந்தும் கூறுவது ஆசிரியர் கருத்தாயின் அதற்குக் காரணம் வேண்டும். அன்றியும் பன்மை சுட்டிய பெயரே அஃறிணை ஒருமையும், உயர்திணை ஒருமையும் உணர்த்தி விடுமேல், ஒருமை சுட்டிய பெயரும் இவ்வொருமைகளை உணர்த்துதற்குக் காரணமில்லை. எனவே இக் கருத்து ஆராய்தற்குரியதாம்.

நன்னூலாரும், "அவற்றுள், ஒன்றே இருதிணைத் தன்பாலேற்கும்" என்னும் நூற்பாவால் பன்மைப் பெயர் இருதிணையிலும் வரும் பன்மையே குறித்து வருமெனக் கூறுதல் காண்க. எனவே தொல்காப்பியத்தில் கூறும் பன்மை சுட்டிய பெயரும், நன்னூலில் வரும் பன்மை சுட்டிய பெயரும் வேறுவேறாகும் என்பது வெள்ளிடைமலை (28).

(தொடரும்)

# தமிழ் கூறு நல்லுலகம்

திரு. அ. கலியபெருமாள், எம். ஏ.,

( மலர் 23, இதழ் 6, பக்கம் 360 இன் தொடர்ச்சி )

இத்தகு வேந்தர் ஆண்ட தமிழகத்தை — ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகத்தைக் காணுதற்கு நமக்கு ஆவல் உண்டாகின்றதன்றோ! இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் இதோ வருகின்றார். ஆவல்தீர அவர் காட்டும் மூவேந்தர் நாடுகளையும் காணுவோம்.

செழிப்பை எடுத்துக் காட்டும் வகையில் செங்கழுநீர்ப் பூக்கள் மலர்ந்திருக்கின்றன. அதிர்ச்சியால் கொழுமீன் அஞ்சி ஒதுங்க, நடந்து சென்று அப்பூக்களை மேய்கிறது ஓர் எருமை, உண்டகளைப்பு நீங்கப் படுப்பதற்குத் தகுந்த இடம் தேடுகிறது. பசிய மிளகுக்கொடி படர்ந்த பலாவின் நிழல்; காட்டுமல்லிகை யாகிய மலர்ப்படுக்கை; முதுகிணை வருடிக்கொடுக்க மஞ்சள் மெல்லிலை; எருமையின் துயிலுக்குக் கேட்கவும் வேண்டுமோ! இதுதான் குடபுலம் - குட்டுவராளும் சேரநாடு.

“ கொழுமீன் குறைய ஒதுங்கி வள்ளிதழ்க்
கழுநீர் மேய்ந்த கயவாய் எருமை
பைங்கறி நிவந்த பலவின் நீழல்
மஞ்சள் மெல்லிலை மயிர்ப்புறம் தைவர
விளையா இளங்கள் நாற மெல்குபு பெயராக்
குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளும்
குடபுலம்” (சிறுபாணாற்றுப்படை 41-47)

அக நானூற்றிலும் சேரநாட்டில் இதே காட்சியைத்தான் பார்க்கிறோம். தாமரை மேய்ந்த எருமை பலாவின் நிழலில் இளைப்பாறுகிறது.

“பசியென அறியாப் பணைப்பயில் இருக்கைத்
தடமருப் பெருமை தாமரை முனையின்
குடமுதிர் பலவின் கொழுநிழல் வதியும்
குடநாடு” (அகம். 91)

நெட்டிப்பூமாலை, செவியடியில் நெற்றிமாலையாகக் கட்டப் பெற்ற வலிய எருதுகள் பூட்டி உப்பு வாணிகர்தம் வண்டிகள் செல்லப் பின்செல்லும் வளர்ப்பினுல் அவர்தம் மக்களை ஒத்த மந்தி, முத்தைக் கிளிஞ்சலின் வயிற்றகத் திட்டுப் பொதிந்து உமட்டியர் பிள்ளைகளோடு கிலுகிலுப்பை விளையாடும், நீரை எல்லையாக உடையது கொற்கைக் கோமான் தென்புலம்;

சிறுபாண் (53-63)

எங்குநோக்கினும் வயல்கள்; புனல்வளம் தங்கும் மருதநிலம் ஓவியம் நிகர்க்கும் உண்ணுந் துறையிடத்து மலர்ந்து மணக்கிறது தாமரை. பதுமபீடத்தில் பண்புறு பேடையைத் தழுவியவாறு துயில்கிறது வண்டு. பின்பு உறக்கம் நீங்கிச் சீகாமரம் என்னும் பண்ணைப் பாடுகிறது. இதுதான் குணபுலம் - செம்பியன் கோலோச்சும் நாடு'

சிறுபாண் (70-79)

குடபுலக் காவல் குட்டுவர்க்குப் பூவா வஞ்சியும், குணபுலக் காவல் கொடித்தேர் செம்பியர்க்குக் கூவாக் கோழியும், தென் புலக்காவல் செழியர்க்குத் தமிழ் ஓவாக் கூடலும் கோநகரங் களாக ஏற்றம்பெற்று விளங்கின. இவையன்றி முசிறியும், தொண்டியும், கொற்கையும் புகாரும் சிறந்த பட்டினங்களாக இருந்தன. தமிழகத்தின் தலைசிறந்த நகரங்களை இளங்கோ,

" மாட மதுரையும் பீடார் உறந்தையும்
கலிகெழு வஞ்சியும் ஒலிபுணர் புகாரும் " (வேனிற்காதை)

என்று சிலம்பில் குறிக்கின்றார்.

மதுரை என்றதும் மதுரத் தமிழும் மாபெரும் சங்கமும் நினைவில் தோன்றும். கூடலோடு கொஞ்சு தமிழையும் இணைத்தே கூறுவர் பாடல் வல்லார்.

"தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை "

(சிறுபாணாற்றுப்படை - 66-67)

என்று இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனாரும்,

" தமிழ் கெழு கூடல் "

என்று புறத்தில் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனாரும் கூறுகின்றனர். பின்வந்த வில்லிபாரதத்துக்குச் சிறப்புப்பாயிரம் யாத்த வரந்தருவாரும்

" பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே இருந்து வைகை
ஏட்டிலே தவழ்ந்த பேதை"

என்று பாடியிருத்தல் ஈண்டு நோக்கத்தக்கது.

வான் தொகுத்த காலென நிவர்த்த மாடங்கள், மதுரையின் செல்வச் சிறப்பை எடுத்துரைப்பன. மற்றைய நகரங்களிலும் மாடங்கள் பொலிந்தன எனினும், " மாட மதுரை " என்று அழைக்கப்படும் சிறப்பு இந்நகருக்கே உண்டு,

" மலர்ந்த சீர், மாட மதுரை யகத்துச் சென்று "

என்று கனாத்திற முரைத்த காதையிலும்,

" மாட மதுரை மாநகர் புகுகென "

என்று அடைக்கலக் காதையிலும் இளங்கோ குறித்தல் காண்க.

" மழையாடு மலையின் நிவந்த மாடம் "
(மதுரைக் காஞ்சி - 355)

" மலைபுரை மாடத்துக் கொழுநிழல் இருத்தர "
(மதுரைக்காஞ்சி - 406)

இவைபோன்றவற்றால் மதுரை நகர் மாடச் சிறப்பு இனிது விளங்கும்.

பெரும்புனல் நாட்டுப் பீடார் உறந்தை, கோழி யென்றும் குறிக்கப்பெறும். இந்நகர் பற்றிக் குறிப்பிடாத இலக்கியமே இல்லையெனலாம். உறைவார்க்குத் தேவையான நல்வளம் பெற்றது உறையூர். இடர்ப்பாடு கருதி அந்நகர் விட்டு ஏகுநர் யாருமில்லை. தன்னக மிருப்பார் தனைவிடுத்து ஓடாமைக்குக் காரணமாகிய மேற்கோளினை உடையது அவ்வூர்.

" ஓடாப் பூட்கை உறந்தை " (சிறுபாணாற்றுப்படை 83)

உறையூரின் நல்லவையும் அதுகாக்கும் அறமும் உலகறிந்தவை. அறந்துஞ்சும் அந்நகரில் சான்றோர் பழிப்பனவற்றிற்கு இடமில்லை. உறந்தையில் அணுவளவும் அறந்தவறாத் தகைமையைக்கண்டகாவிரிப்பூம்பட்டினத்துக்காரிக் கண்ணனார்,

" அறந்துஞ்சு உறந்தை " (புறம் 58) என்று கூறிப் பெருமைப் படுகிறார். ஏனைய வினைகளைப் பயன்படுத்தாமல் "துஞ்சு" என்னும் வினை பொதிந்திருப்பது எண்ணி மகிழ்தற் குரியது. உறையூரின், அறத்திற்கு வேலியான் நல்லவையையும் இலக்கியம் குறிப்பிடுகிறது.

" அறங்கெழு நல்லவை உறந்தை " (அகம் 93)

குறைவு படாப் புகழுடைய உறந்தையை, நக்கீரர்,

" கெடலரு நல்லிசை உறந்தை " (அகம் - 369)

என்று சிறப்பிக்கின்றார்.

"வளங்கெழு சோழர் உறந்தை" (குறுந்தொகை - 116)

"மறங்கெழு சோழர் உறந்தை" (நற்றிணை - 400)

இவ்வாறு பலவிடங்களில் உறையூர் குறிக்கப்பெறுகிறது.

வானவர் நாட்டுக் கோநகராம் வஞ்சி, வளம்பல பெற்று மக்கள் மனமகிழும் செருக்கினை உடையது. எனவேதான் இளங்கோவும் " கலிகெழு வஞ்சி" என்று பாடியுள்ளார், வஞ்சி என்பது மலருக்கும் உரிய பெயர். வஞ்சி சூடிப் பகைவர் மேற் செல்லுதல் என்பதைப் புறப்பொருளில் காண்கிறோம். இந்நகரைக்குறிக்கும்போதெல்லாம் "பூவா வஞ்சி" எனக்குறித்தல் கவிஞர் மரபு.


"பூவா வஞ்சியும் தருகுவன்" (புறம் - 32)

"பூத்த வஞ்சி பூவா வஞ்சியிலே" (மணி-26-78)


"பூவா வஞ்சியிற் பூத்த வஞ்சி" (சிலம்பு-26-50)

ஆன்பொருநை நதிக்கரையில் அமைந்த இந்நகரின் நீர்வளம் பற்றிக் கூறத் தேவையில்லை. வருபுனலும் வாயிலும் உடையதாகலின், " வருபுனல் வாயில் வஞ்சி " என்று சிறுபாணாற்றுப் படையில் குறிக்கப்பெறுகிறது. நகரின் விண்பொரு புகழினையும் வெற்றிச் சிறப்பினையும் எண்ணிப் புறத்தில் பேய் மகள் இளவெயினி, " விண்பொரு புகழ் விறல்வஞ்சி " என்று அழைக்கிறார். இளங்கோவும் " வலம்படு சிறப்பின் வஞ்சி மூதூர் " என்று பாடியுள்ளார். (தொடரும்)


தருமையாதீனம் ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி
தேவஸ்தானம் மகாகும்பாபிஷேகவிழாவில். சுவாமி விமானமேல்தளத்தில்




ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும்,
அறநிலைய ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார் அவர்களும்.
தஞ்சைஅறநிலையத்துணை ஆணையர் திரு. K. சோமசுந்தர தேசிகர் அவர்களும்.




திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான
ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜ சுவாமி தேவஸ்தானம்



மகா கும்பாபிஷேகக் காட்சி



அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்



கோயில்முன் தோற்றமும் திருக்குளமும்

தருமையாதீனம் ஆச்சாள்புரம் மகாகும்பாபிஷேக விழாவில்



யானைமேல் திருமுறைத் திருவீதியுலா.

# சஹஸ்ராகமம்

சிவாகம வித்துவான்

திரு. S. சுவாமிநாத சிவாசாரியார்

( மலர் 23, இதழ் 6. பக்கம் 351 இன் தொடர்ச்சி )

கார்ஹபத்யாக்னி

रक्ताङ्गं रक्तवस्त्राढ्यं वरदाभय संयुतम् ।
स्रुक्स्रुवौ चोर्ध्वे हस्तेतु मुक्ताभरण भूषितम् ॥ 344

सप्तजिह्वा समायुक्त मेकवक्त्रं जटाधरम् ।
अश्वारूढं गार्हपत्यं ध्यायेत्पश्चिमकुण्डके ॥ 345

மேற்கில் புருஷ வடிவமாய் நிற்பதாய் விருத்தாகாரமாக விளங்கும் குண்டத்தில் கார்ஹபத்தியம் என்ற அக்னி தியானிக்கப்படுகிறது. ரக்தவர்ணமான அவயவங்களை உடையவர், ரக்த வர்ணமான ஆடை உடையவர், வரதம், அபயம், சுருக், சுருவம் என்ற நான்கு கைகளை உடையவர். ஏழு நாக்குகளை உடையவர் ஒரே முகத்துடன் ஜடாதாரியாய் குதிரை வாஹனத்துடன் விளங்கும் தோற்றமுடையவர் கார்ஹபத்யம் என்ற அக்னி தேவன்,

பாலாக்னி

द्विमुखंचैक हृदयं चतुश्श्रोत्रं द्विनासिकम् ।
चतुश्शृङ्गं वृषारूढं बालादित्य समप्रभम् ॥ 346

स्रुक्स्रुवौचा क्षमालां च शक्ति दक्षिण पार्श्वके ।
तोमरं व्यजनं चैव ध्रुवपात्रंतु वामके ॥ 347

बालाग्नि रूपमेवंतु विन्यसेद्वायुकुण्डके ।

வடமேற்கு மூலையில் புருஷாகாரமாய், நிற்பதாய் விளங்கும் அறுகோண குண்டத்தில் பாலாக்னியைத் தியானிக்கவேண்டும், இரண்டு முகம், நான்கு காது, இரண்டு நாசிகை, நான்கு

கொம்புகள் இவைகளை உடையவர். இளம் சூரியன் போன்ற காந்தியுடையவர், விருஷபத்தின் மீது வீற்றிருப்பவர், சுருக் சுருவம், அக்ஷமாலை, சக்தி, தோமரம், விசிறி, நெய்பாத்திரம், என்பவைகளைக் கையிலணிந்தவர் பாலாக்னியாவர்.

கேவலாக்னி

द्विनेत्रं चतुर्भुजं चैव वरदाभय संयुतम् ॥ 348

शुक्लवस्त्र समायुक्तं श्वेतरक्त समन्वितम ।
सर्वालङ्कार संयुक्तं पङ्कजासन संस्थितम ॥ 349

केवलाग्निमिति ध्यात्वा कुण्डमध्येतु चोत्तरे ।

வடதிசையில், பெண்வடிவமாய், உட்கார்ந்ததாய் இருக்கும், கமல வடிவமான குண்டத்தில், கேவலாக்னி என்ற அக்னியைத் தியானிக்கவேண்டும். இரண்டு கண்களுடனும் நான்கு கைகளுடனும் கூடியவர், அபயவரத்துடன் கூடியவர், வெண்மையான வஸ்திரம் தரித்தவர். பாடல வர்ணமுடையவர், தாமரையின்மீது வீற்றிருப்பவர், பூர்ணமான ஆபரணம் பூண்டவர், என்று இவ்வாறு கேவலாக்னியைத் தியானிக்கவேண்டும்.

சாமான்யாக்னி

द्विमुखं वेदश्रिङ्गं च ह्यभयं शक्ति स्रुक्स्रुवौ ॥ 350

वरदं खेटमनलं वहन्तं सव्यवामके ।
सामान्याग्नि स्वरूपंतु विन्यसेदीश कुण्डके ॥ 351

வடகிழக்கு திக்கில் புருஷவடிவமாய் நின்றுகொண்டு எண்கோண வடிவமான குண்டத்தில் யௌவனக்னி என்ற பெயர் உடைய அக்னியானது தியானிக்கற்பாலது, அவ்வக்னியானது இரண்டு முகத்துடன் கூடியது. நான்கு கொம்புகளை உடையது. ஏழுகைகளிலும், அபயம், சக்தி, சுருக், சுருவம், வரதம், கேடயம், அக்னி இவைகளைத்தரித்து நிற்பவர், இத்தகைய சாமான்யாக்னியை ஈசான குண்டத்தில் பிரதிஷ்டித்துப் பூஜிக்க வேண்டும்.

पूर्वोक्ते नैव मार्गेण तत्तत्कुण्डेषु देशिकः ।
ध्यात्वाऽवाह्य प्रधानेतु यजेच्छंभुमनन्यधीः ॥ 352

प्रधाने चासनं कल्प्य मूर्त्ति ध्यानं च विन्यसेत् ।
पञ्चवक्त्रं दशभुजं गोक्षीर धवळप्रभम ॥ 353

सर्वसिद्धिप्रदं ध्यायेदासीनं पश्चिमाननम् ।
शिवाग्नौ शिवमावाह्य नित्यवत्पूजयेच्छिवम् ॥ 354

இவ்வாறு கிழக்கு முதல் ஈசானம் ஈருகவுள்ள திக்குகளில் ஆஹவநீயம் முதலிய அக்னிகளைத் தியானித்து ஈசானத்திற்கும் கிழக்கிற்கும் நடுவிலுள்ள விருத்தாகாரமாய் புருஷவடிமாய் நின்ற திருக்கோலம்கொண்டதான பிரதானகுண்டத்தில், சிவாக்னியைத் தியானிக்கவேண்டும். அவ்வக்னி, ஐந்து முகம் பத்துக்கைகளுடன் பால் போன்ற வெண்மையான திருமேனியுடன் சர்வசித்தி யளிக்ககூடியதாய் உட்கார்ந்ததாய் விளங்கும். இவ்வாறு சிவாக்னி யைத் தியானித்து அந்த சிவாக்னியில், சிவனைத் தியானித்து முறைப்படி பூஜிக்க வேண்டும். பஞ்சாஸன பஞ்சாவரண மார்க்கமாய் பூஜித்து பாத்யம், தூபம், தீபம் முதலிய உபசாரங் களைச் செய்யவேண்டும். சிவாக்னியில் சிவனைப் பூஜித்துப் பின்னர், கிழக்கு முதலிய குண்டங்களில் இறைவனின் மூர்த்தி களைப் பூஜிக்கவேண்டும்.

एवं संपूजयेत्पूर्वं क्ष्मामूर्तिं पूर्वतो यजेत् ।
क्ष्मावन्हि यजमानार्क जलवायु निशाकराः ॥ 355

व्योमान्त मूर्तयश्चाष्टौ कुण्डानां मूर्त्तिधारकाः ।
भवश्चोग्रश्च शर्वश्च महादेवश्च रुद्रकः ॥ 356

भीमः पशुपति श्चैव त्वीशानश्चाष्ट मूर्त्तयः ।
पूर्वादीशान कुण्डेषु पूजयेत्तु यथा विधि ॥ 357

க்ஷமா மூர்த்தி, வன்னி மூர்த்தி, இயமான மூர்த்தி, அர்க்க மூர்த்தி, ஜல மூர்த்தி, வாயு மூர்த்தி சோம மூர்த்தி, வியோம மூர்த்தி என்ற எட்டு மூர்த்திகளையும் தியானித்து அந்த மூர்த்தி களுக்கு அதிதேவர்களான பவன், உக்கிரன், சர்வன், மஹா தேவன், பீமன், பசுபதி, ஈசானன் என்ற எட்டு மூர்த்தியதிபதி களையும் தியானித்துப் பூஜிக்கவேண்டும், அதாவது.

भवश्च पूर्वदिग्भागे त्वाग्नेय्या मुग्र एव च ।
शर्वश्च दक्षिणेकुण्डे महादेवस्तु नैरृते ॥ 358

रुद्रश्च पश्चिमे भागे भीमो वै वायुगोचरे ।
पशुपतिश्चोत्तरे कुण्डे चैशान्यामीश एव च ॥ 359

பவன் கிழக்கிலும். உக்கிரன் தென்கிழக்கிலும். சர்வன் தெற்கிலும், மஹாதேவன் தென்மேற்கிலும், உருத்திரன் மேற்கிலும், பீமன் வடமேற்கிலும், பசுபதி வடக்கிலும் ஈசானன் வடகிழக்கிலும். தியானித்துப் பூஜிக்கப்பட வேண்டும்.

त्रिणेत्राश्चतुर्भुजाश्चैव जटामकुट धारिणः ।
सर्वाभरण संपूर्णाः कुण्डानां मूर्त्तिपाः स्मृताः ॥ 360

इत्थं च मूर्त्तिपाः प्रोक्ताः कथ्यन्ते मन्त्रमूर्तयः ।
पुरुषाद्या दिक्षुकुण्डे विदिक्षु हृदयादिकाः ॥ 361

ईशानं नेत्रमस्त्रं च मूलं चैव प्रधानके ।

குண்டங்களில் விளங்கும். மூர்த்திகளை மூன்று கண்களையுடையவர்களாயும் ஜடாமகுட தாரிகளாயும், நிறைந்த ஆபரணமுடையவர்களாயும் நினைத்து இவ்வாறே அம்மூர்த்திகளின் அதிபதிகளான பவன் முதலானவர்களும் இருப்பதாக நினைத்துப் பூஜிக்கவேண்டும்; இவ்வாறு தியானிக்கப்பட்ட மூர்த்தி மூர்த்தியதிபதிகளைப்போன்று ஹ்ருதயம் முதலிய மந்திர மூர்த்திகளையும் தியானிக்கவேண்டும். அதாவது, தத்புருஷம் அகோரம், வாமதேவம், சத்யோஜாதம், ஹ்ருதயம், சிரசு, சிகை, கவசம், என்ற எட்டு மந்திரங்களைச் சுற்றிலும் உள்ள எட்டுக்குண்டங்களிலும் பூஜித்து. ஈசானம், நேத்ரம், அஸ்திரம். என்ற மூன்று மந்திரங்களை ப்ரதான குண்டத்தில் பூஜிக்கவேண்டும். அது எவ்வாறெனில்,

पुरुषं पूर्वकुण्डेतु पीतवर्णं समद्रितिम ॥ 362

अघोरमञ्जनाभासं ध्यायेद्दक्षिण कुण्डके ।
सौम्यकुण्डे यजेद्वामं रक्तवर्णं समन्वितम् ॥ 363

பொன்வர்ண முடையதான தத்புருஷம் என்ற மந்திரத்தை, கிழக்கிலுள்ள குண்டத்திலும். கருப்பாக மைபோன்ற வர்ண முடையதான அகோரம் என்ற மந்திரத்தைத் தெற்கில் உள்ள குண்டத்திலும் இதுபோல சிவந்த வர்ண முடையதான வாமதேவம் என்ற மந்திரத்தை வடக்கு திக்கிலுள்ள குண்டத்திலும் பூஜிக்கவேண்டும்.

[தொடரும்]

# அமைச்சனின் சொல்வன்மை

அமைச்சன் ஒருவனுக்கு அமையப் பெறவேண்டிய தகைமைகளுள் தலையாயதும் இன்றியமையாததும் நாவன்மை என்னும் நலமாம். ஆசிரியர் தெய்வப்புலவர் திருவள்ளுவனர்,

'தெரிதலும் தேர்ந்துசெயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு'

எனவும்,

'அறனறிந்த ஆன்ற சொல்லா னெஞ்ஞான்றும்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை'

எனவும்,

'அறிகொன் றறியா னெனினு முறுதி
உழையிருந்தான் கூறல் கடன்'

எனவும், அமைச்சு என்னும் அதிகாரத்தின்கட் கூறியமையோ டன்றி அவன் நா நலமுடையனய் இருத்தல் வேண்டும் என்பதை அவ்வதிகாரத்தை யடுத்துச் சொல்வன்மை என்னுமோர் அதிகாரமுமமைத்து வலியுறுத்தா நிற்கின்றனர்.

மனுவென்னும் சோழமன்னனின் அமைச்சரது சொல் வன்மையை அநபாய சோழ மன்னனின் அமச்சராயிருந்தவரான சேக்கிழாரடிகள் தெள்ளிதிற் புலப்படுத்துகின்றமை பெரிதும் அறிந்தின் புறத்தக்கதா யிருக்கின்றது.

அதுகாறுங் கேட்டறியா ஆராய்ச்சி மணியின் பேரொலியைக் கேட்ட மனுமன்னன் ஏதுமறியானய் அச்சுற்று யாது நிகழ்ந்த தென்று வினவுமுகத்தான் தன்மதி யமைச்சனை இகழ்ந்து நோக்கினன், நோக்கவும், நிகழ்ந்தவெல்லாம் முன்னுற அறிந் துள்ளவனும், நிறைந்த கேள்வியறிவுடையவனும், வழிவழிவந்த வாய்மையுடையவனுமான அவ்வமைச்சன் நிகழ்ந்ததை மிகவும் நயமும் திறமும்படப் பின்வருமாறு நவிலுகின்றன்.

'வளவ நின் மைந்தன் ஆங்கோர்
மணிநெடுத் தேர்மேல் ஏறி
அளவில்தேர்த் தானை சூழ
அரசுலாந் தெருவிற் போங்கால்
இளைய வான் கன்று தேர்க்கால்
இடைப்புகுந் திறந்த தாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து
விளைத்ததித் தன்மை யென்றான்,

அரசே, என்றாயினும், மன்னா, என்றாயினும், பிறவாயினுங் கூறாது முன்னொருகால் தன்னகம் புக்க குறுநடைப் புறவின் தபுதியஞ்சிச்சீரை புக்க சிபிவேந்தனுடையதும், உரைமுடிவு காணான் இளமையோன் என்ற நரைமுது மக்கள் உவப்ப நரை முடித்துச் சொல்லான் முறை செய்தவனும் கரிகாலனுடையதுமான வழுவா நெறிசேர் வளவர் குலமாஞ் சோழகுலத்தின் வழிவழி வந்தவன் என்னுங் குறிப்பு தோன்ற 'வளவ' என்றான், அங்ஙனம் இறைமுறை திறீஇய குறைவில் சீர்த்தி சேர் குலவழி வந்த நிறைகலை வல்லான் நின்மைந்தனும் நீதி தவறுவானல்லன் என்னுங் குறிப்புத் தோன்ற, இளவரசன் என்றாயினும், வீதிவிடங்கன், என்றாயினும், பிறவாயினுங் கூறாது 'நின்மைந்தன்' என்றான். அவன் தேரின் மீதேறிச் செல்லுங்கால் வழியில் போவாரும் வருவாரும் தேரின் வரவை அறிந்து விலகிக்கொள்ளுவான் வேண்டி அதன் வரவை முன்னறிவிக்கும் மணியொலி நீண்ட தொலைவுவரை ஒலித்ததென்பான் 'மணிநெடுந்தேர்' என்றான். வந்த ஆன்கன்றினைத் தடுத்தல் வீதிவிடங்கனால் இயலாதென்பான் 'தேர்மேலேறி' எனவும், அங்ஙனத் தடுத்தற்குரியார் முன்னும் பின்னும் சூழ்ந்து சென்றதானை வீரர்களே யாவரென்பான் 'அளவில் தேர்த்தானை சூழ' என்றான், தேர் சென்றவிடம் அரசரும் சுற்றமுஞ் செல்லுதற்குரிய வீதியேயன்றி மாக்களும் பிறவும் உலவும் வீதியன்றென்பான் 'அரசுலாந் தெருவிற் போங்கால்' என்றான். மணியொலி கேட்டுவிலகும் முற்பழக்கம் இல்லாமையோடு யாவரும் பிடிக்கவும் தடுக்கவும் இயலாவண்ணம் துள்ளியோடியதென்பான் 'இளையவான் கன்று' என்றான், கன்று தானே வந்து புகுந்து இறந்ததே யன்றி நின்மைந்தன் அதன்மேல் செலுத்திக் கொன்றானல்லன் என்பான் 'தேர்க்காலிடைப் புகுந்து இறந்தது' என்றான், துன்பம் பொறுக்க லாற்றாத் தாய்மை உணர்ச்சியும், நீதிவேண்டும் அறிவும், உரிமையும்

உடையதென்பான் 'பசு' என்றது 'தளர்வுறும்' 'இத்தாய்' என்றான். நிகழ்ச்சியை யாற்றொழுக்காகவும், 'ஆங்கு, ஓர், ஆக' என்னும் சொற்களைக் கூறிப் பதற்றம் உருவண்ணம் நேரத்தைச் சற்று வளர்த்தியும், உண்மையை ஒரு சிறிதும் கூட்டுதலுங் குறைத்தலுஞ் செய்யாது, எவர்க்குந் தீங்கிழையா வாய்மையுடன், அரசன் உள்ளங் கொள்ளும் வண்ணம் நயமுந் தெளிவும்பட நவின்ற அவ்வமைச்சரது நுண்மாண் நுழைபுலம் எண்ணுந்தோறும் வியத்தற்குரிய தாய் இருக்கின்றது.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam,

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

I had the good fortune of visiting the temple today 27—5—64 and performing worship to Sri Vaithinathaswami, I am very glad to find that the temple is maintained in a very good condition and worship is carried out according to our ancient tradition and heritage. The authorities concerned deserve every congradulation for the way in which they are attending to the maintenance of this temple and the carrying of the worship.

(Sd ) K. S. Ramamoorthy,
High Court Judge, Madras.

27—5—64

To day my eyes are opened to the deep mysteries of life in the Sannithanam of Sri Muthukumaraswami. The pooja and Thevaram parayanam deeply immerses one into deep piety. The way in which the Devasthanam is maintained is superb and the authorities deserves very great appreciation.

(Sd.) N. Subramania Pillai
Advocate, Madras.

27—5—64

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுர சுவாமி கோயில் மஹோற்சவத்தை யொட்டி திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு, ஆதீன மடாலய திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் 23—5—64 சனிக்கிழமை தொடங்கி 26—5—64 செவ்வாய்க் கிழமை முடிய மிகச்சிறப்பாக நிகழ்ந்தேறியது. பன்னிரு திருமுறைகளும், பதினுன்கு சாத்திரங்களும் மாநாட்டுப் பொருளாக அமைந்தன. இரவில் இன்னிசை, பஜனை, நடனம், கதை முதலிய சிறப்பு நிகழ்ச்சிகள் நிகழலாயின. ஆதீனத் திருக்கோயில்களில் பணியாற்றும் திருமுறை இன்னிசை வாணர்களும் தேவார பாடசாலை மாணவர்களும் மாநாடு தொடங்கும்வரை மாலையில் தக்க துணைக்கருவிகளுடன் திருமுறை இன்னிசை வழங்கினுர்கள்.

## முதல் திருமுறைத் திருநாள் :

முதல் திருமுறைத் திருநாளை சென்னை மாநில செய்தித் துறை அமைச்சர் கனம் திரு. ஜி பூவராகன் பி. ஏ. (ஆனர்ஸ்) அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையம் வித்துவான் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கனம். அமைச்சர் அவர்களை வரவேற்று "செய்தித்துறை அமைச்சரான கனம் பூவராகன் அவர்கள் இந்த மாநாட்டைத் தொடங்கிவைப்பது மிகப்பொருத்தம். சமயச்செய்திகள் நாட்டிற் பரவவேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் அவர்கள் இங்கே வருகை தந்து இந்த மகாநாட்டைத் தொடங்கிவைக்க இருக்கிறுர்கள். இளமையும், ஆர்வமும் மிக்க அமைச்சர் அவர்கள் திருவருள் துணைக்கொண்டு உயர்ந்துள்ளார்கள். உலகில் நல்லவர்களாக இருப்பவர்கள் வல்லவராக இருப்பதில்லை: வல்லவர்களாக இருப்பவர்கள் நல்லவர்களாக இருப்பதில்லை: அமைச்சரவர்களோ வல்லவராகவும், நல்லவராகவும் விளங்குவதை அவரது இரண்டாண்டு நிர்வாகத்தால் நம்மால் அறிய முடிகிறது. திருவருளும், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களின் குரு அருளும் அவர்களுக்கு நிறைய உண்டு. அவர்களை இம்மாநாட்டைத் தொடங்கிவைக்கவேண்டி வருக வருக என வரவேற்

கிறேன். மற்றும் இன்று சொற்பொழிவு நிகழ்த்த இருக்கும் பல்கலைச்செல்வர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களையும், இசைவழங்க இருப்பவர்களையும், சிவநெறிச் செல்வர்களாகிய உங்களையும் ஆதீனத்தின் சார்பில் வரவேற்கிறேன்; வணக்கம்!" என்று வரவேற்புரை வழங்கினார்கள்.

அமைச்சர். கனம். திரு ஜி. பூவராகன் அவர்கள் மாநாட்டைத் தொடங்கிவைத்துப் பேசுகையில் "இத்தகைய திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு எனக்கு மிகக் குறைவு; ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் அருளால் இரண்டாண்டுகளாக இதில் கலந்துகொள்ளும் பேறுபெற்றேன். திருமுறை விழாக்களில் கலந்துகொள்ளும் மக்களின் தொகை பெருகவேண்டுமென்பது என் ஆசை. 'நெறி' என்ற சொல்லுக்கு 'நீதி, நேர்மை, வழி' என்றெல்லாம் பொருளுண்டு. மக்களுக்கு - இதில் கலந்துகொள்வோர்க்கு நல்வழிகாட்டவே இத்தகு மாநாடுகள்! நமக்காக எடுக்கப்பட்ட இவ்விழா, நம்மை நாமே செம்மைப் படுத்திக்கொள்ள உதவும். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் எவ்வளவோ அரும்பணிகள் ஆற்றினும், அவர்கள் செய்த தமிழ்ப் பணியை இந்த மாநிலம் மறக்கக்கூடாது. அவர்கள் தொண்டு மேன்மேலும் நீடிக்க நாம் அவர்களை ஊக்குவிக்கவேண்டும். தற்காலத்தில் தெய்வநம்பிக்கை சற்று குறைந்திருப்பதாக என்னளவில் தோன்றுகிறது. அத்தகு நிலைமாற இத்தகு விழா பயன்படும். திருமுறைகளில் தமிழ் மணமும், பக்திப் பரவசமும், இசையும் பரவிக்கிடக்கின்றன. தேவாரத் திருமுறைகளின் சாரத்தை - பிழிவை அதனைக்கற்றறிய முடியாதவர்களுக்குப் பேராசிரியர் (தெ. பொ. மீ.) போன்றோர் வழங்குகின்றனர்.

மனம் கட்டுப்படாததால் நாட்டில் பல தீமைகள் நிகழ்கின்றன. நல்ல நீதியும், பண்பாடும் கொண்ட மக்களை சட்டத்தால் தோற்றுவிக்க முடியாது. இத்தகு அருள்நெறி காட்டும் மாநாடுகளே அதற்குத் துணைபுரிந்து, அரசினர் செய்ய வேண்டிய முழுவேலையையும் ஏற்றுக்கொள்ளுகிறது.

சமய வளர்ச்சிக்கு தமிழ்மொழி பெருந்தொண்டு செய்துள்ளது. சைவமும் - தமிழும் ஒன்றாகவே வளர்ந்துள்ளன.

தமிழை நன்குகற்று அதன்வழி ஒழுகவேண்டும். ஏனைய ஆதீனங்களை விட தருமையாதீனம் தமிழ்த் தொண்டில் முன்னிற்கிறது. தமிழை இசையோடு வளர்க்கும் ஓரே ஆதீனம்

தருமபுரம் என்பது மிகையன்று. இத்தகு நற்பணியில் ஈடுபட்டுள்ள ஆதீனத்தார்களுக்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களுக்கும் என் நன்றி; அவர்களுக்கு கடவுள் நீண்ட ஆயுளை அளிக்கப் பிரார்த்திக்கிறேன். என்னை இவ்விழாவில் கலந்துகொண்டே ஆகவேண்டுமென்று வற்புறுத்திய ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகளுக்கும் என்வணக்கம். அனைவருக்கும் என் நன்றி'' என்றார்.

அடுத்து அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியாராய்ச்சித் துறைத்தலைவர், பல்கலைச் செல்வர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் 'உள்ளங் கவர்கள்வன்' என்றபொருள் வழி நின்று பேசுகையில், '' ஞானசம்பந்தர் தமிழை 'திருநெறிய தமிழ்' என்றார். பல பக்திப் பாடல்களை இசைகூட்டிப் பாடிய பெரியார் அவர். ஏழிசையால் அறுபகை செற்று' என்ற அவரது உள்ளம் நாம் நினைத்தற்குரியது. யஜுர் வேதம் சிவபெருமானைத் திருடனுக் கெல்லாம் திருடன்' என்கிறது. அதனைத்தான் 'உள்ளங் கவர் கள்வன்' என்றார் பிள்ளையார்' இப்பொருள் கொள்ளாக்கால் வேதத்தைப் புரிந்துகொள்ள முடியாது. ஆண்டவன் காதலன்; உயிர்கள் அவனுக்குக்காதலி. நம்மை விட்டு அவன் வாழமுடியாது. மக்கள் உள்ளங்களைத் திருடியவன் என்பதன் கருத்து இப்போது நமக்கு விளங்கும். 'தோடுடைய என்றெடுத்து பாலருவாயராக அவர்பாடிய இவற்றை நாம் நினைவூட்டிக் கொள்ள வேண்டும்'' என்றார்.

இரவு பத்துமணியளவில் சேலம் திருமதி S. ஜெயலெட்சுமி குழுவினரின் இசையரங்கு நிகழ முதற் திருமுறைத் திருநாள் இனிதே நிறைவெய்திற்று.

## இரண்டாம் திருமுறைத் திருநாள் :

24—5—64 ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணியளவில் தொடங்கிய இரண்டாம் திருமுறைத் திருநாளை வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தொடங்கிவைத்து இரண்டாம் திருமுறையை அருளிய ஞானசம்பந்தப் பெருமானின் அற்புதங்கள் சிலவற்றை இனிதே விளக்கினார்கள்.

அடுத்து, திருநெல்வேலி இந்துக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், பைந்தமிழ்ச் செம்மல் வித்துவான் திரு. கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள் 'இந்திய தத்துவ ஞானம்'

என்ற பொருள்பற்றிப் பேசுகையில் "இந்தியாதான் தத்துவ ஆராய்ச்சியில் முதலிடம் வகிக்கிறது; இந்தியர்கள் தத்துவ ஆராய்ச்சியினை நம் பேரறிஞர்கள் எத்துணையோ நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஆய்ந்து முடிவு செய்து வைத்துள்ளனர். புறப்பொருள் ஆராய்ச்சி விஞ்ஞானம் ஆகும்; அகப்பொருளை - உள்ளுணர்வை - மனத்தை ஆராய்வது தத்துவஞானம் ஆகும். இந்திய தத்துவஞானம் வாழ்க்கையோடு இணைந்து - இயைந்து - கலந்து - கசிந்து உணவாய், உடையாய், வாழ்வாய் அமைந்து கிடக்கிறது. மனிதனை மனிதனாக வாழவைக்கும் பெருமுயற்சியில் மக்களை இட்டுச்செல்லும் தத்துவ ஆராய்ச்சியை இந்திய தத்துவஞானிகளே தெளிவுபடுத்தியுள்ளனர். தத்துவஞானம் இன்மையே இன்றைய நாட்டில் மனிதனது குறைபாடுகளுக்குக் காரணம் ஆகும். தத்துவ ஆராய்ச்சியை - விளக்கத்தை, பள்ளிகளோ, கல்லூரிகளோ கற்பிப்பதும் இல்லை; மாணவர்கள் கற்க முன்வருவதும் இல்லை. சென்னைப் பல்கலைக் கழகத்தில் கற்கவந்த 6000 மாணவர்களில் 3 பேர்தான் தத்துவம் படிக்க முன்வந்துள்ளனர் என்றால் இன்றைய தத்துவஞான வளர்ச்சிக்கு வழியேது? நம் குடியரசுத் தலைவர் டாக்டர். கனம் திரு. இராதாகிருட்டினன் அவர்கள் உலகம் போற்றும் தத்துவஞானி. அவர் வரைந்த 'இந்தியத் தத்துவஞானம்' என்ற பெரு நூலை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மொழி பெயர்த்து வெளியிட இருப்பதறிந்து மகிழ்ந்தேன்" என்று பேசினார்.

தொடர்ந்துபேசிய சென்னை 'திருக்கோயில்' ஆசிரியர் திரு. முருகவேள் M. A., M. O. L., அவர்கள் 'திருக்களிற்றுப்படியார்' என்ற சாத்திரப்பெருநூலை ஆய்வு முறையில் விளக்குகையில்' திருக்களிற்றுப்படியார் மெய்கண்டார் காலத்துக்கு முற்பட்டது; திருவுந்தியார்க்குப் பிற்பட்டது; திருவுந்தியாரின் விளக்கமாக விரிவாக இதனைக் கொள்ளலாம். சிவஞான போதத்திற்கு முற்பட்ட அனுபவநூல் இஃதென்பர் ஆய்வாளர். ஏனைய சாத்திரங்கள் சிவஞான போதத்தின் விளக்கமாகவும், தருக்க முறையிலும் அமைந்தாற்போல் இந்நூல் அமையாமல் பொதுவான எளிய உண்மைகளை இனிது விளக்கிச் செல்லுகிறது திருக்களிற்றுப் பாடியார். பெரியபுராணம் தோன்றிய சில ஆண்டுகட்குப் பிற்பட்டவர் இந்நூலாசிரியர் திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார். பெரியபுராணத்திற் பெரிய ஈடுபாடு கொண்டு பெரிய புராணக் கருத்துக்களையும், சொற்களையும், சொற்றொடர்களையும் தம் நூலில் எடுத்தாண்டுள்ளமை ஆராய்ச்சியாற் புலனாகிறது.

சேக்கிழார் பெருமான் கூறுது விடுத்த ஞானசம்பந்தப் பெருமானின் பாலை நெய்தலாகச் செய்த அற்புதத்தைப் 'பாலைநெய்தல் பாடியதும்' என்று ஒரு வெண்பாவில் மிக அழகாக விதந்தோதுகின்றார். திருவாசகத்திலும், திருமுறைகளிலும் மிக்க ஈடுபாடு கொண்ட இந்நூலாசிரியர் இறைவனின் அர்த்தநாரீசுவர வடிவில் பெருநாட்டங்கொண்டவராக அறியப்படுகிறார். அடியார்கள் பெருமையையும், உள்ளத்ததியல்பும் விரித்தோதும் இந்நூல் ஒப்பற்றதொரு சாத்திர நூல் என்று' இனிதே நல்விளக்கமீந்தார்கள்.

இறுதியாகப்பேருரை ஆற்றிய சென்னை, பைந்தமிழ்ச்செல்வர் திரு. ச. சிவகுமாரன் M. A. அவர்கள் 'அரத்துறை அடிகள் தம் அருள்' என்ற தலைப்புப்பற்றி விளக்கந் தருகையில்' ஞானசம்பந்தப் பெருமான் திருப்பெண்ணாகடம் வணங்கி அரத்துறை அடிகளின் அருள்பெறச் செல்கையில் வழிநடைப் பயணத்தால் எய்த்தாராகமாறன்பாடியில் மாலையில் தங்கிவிட்டார். இறைவனின் பெருங்கருணைத் திறத்தால் திருஅரத்துறைக் கோயில் அதிகாரிகள்பிள்ளையார்க்கு முத்துப்பல்லக்கீந்து எதிர்கொண்டழைத்துச்சென்றனர். பிள்ளையாரின் பெருமை உலகினரை வையத்து வாழ்வாங்கு வாழ வழிவகுத்துத் தருகின்றது. இறைவன் திருவடியை உளங்கொள்ளும் அருளாளர்களுக்கு அவன் 'பொன்னும் மெய்ப்பொருளும், போகமும் திருவும் நல்குவன் என்பது பிள்ளையாரின் ஆணை' என்று விளக்கிப் பெரிய புராணப் பாடல்களை இசைகூட்டி இனிதே இடையிடையேபாடி இன்புறுத்தினார்கள்.

இரவு நிகழ்ந்த வீணை இசையரங்கை மாயூரம் மாஸ்டர், திரு. சு. சந்திரசேகரன் குழுவினர் நிகழ்த்தினர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் இசையரங்கிற்கு எழுந்தருளி, திரு. சந்திரசேகரனின் திறனைப் பாராட்டி 'வீணை இன்னிசைச் செல்வன்' என்ற பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்தி வாழ்த்தி அருளினார்கள். ஏனைய கலைஞர்களும் சிறப்பிக்கப்பெற்றனர். 'வீணை இன்னிசைச் செல்வனைப்' பாராட்டி சென்னை சுவாமிகள் அவர்களும் குடந்தை வீணை ஆசிரியர் அவர்களும், பைந்தமிழ்ச் செல்வர் திரு. ச. சிவகுமாரன் M. A., அவர்களும் ஆசிகூற இரண்டாம் திருமுறைத் திருநாள் இனிதே நிறைவெய்தலாயிற்று.

## மூன்றும் திருமுறைத் திருநாள்

வேதநெறி தழைத்தோங்க, மிகுசைவத்துறை விளங்கப் பூதபரம்பரை பொலிய, புனிதவாய் மலர்ந்தழுத சீதவள வயற் புகலித் திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச்செய்த மூன்றுந் திருமுறைத் திருநாளை 25—5—64 திங்கட்கிழமை மாலை தொடங்கிவைத்த சென்னை, வித்துவான் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அன்றைக்கு சிந்திக்கவிருந்த சிவஞான போதம் என்ற சாத்திர நூலை அருளிய 'ஈராண்டிற் சிவஞானம் பெற்றுணர்ந்த மெய்கண்டாரின் வரலாற்றினை மிகச் சுருக்கமாகவும், அழகாகவும் எடுத்தோதி முதல் மூன்று சூத்திரங் களின் பிண்டித்த கருப்பொருளை விளக்கினார்கள்.

அடுத்து, தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர் நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியை வித்துவான் திருமதி. ப. நீலா அவர்கள் 'விலையுடை அருந்தமிழ்' என்ற பொருள் பற்றிப் பேசும் முன், அன்னாரின் உடன் தோன்றல்களாகிய திரு. இராசேந்திரன் - விசயா இருவரும், பிள்ளையார் திருவா வடுதுறை இறைவனைப் பாடிப் பொற்கிழி பெற்றதாகிய 'இடரினும் தளர்னும்' என்று தொடங்கும் திருப் பதிகத்தின் முதல் - இறுதிப் பாடல்களையும் பிள்ளையாரின் மற்றைய ஆவடு துறைப் பதிகப்பாடல்களையும் இசையுடன் இனிதே பாடிக் காட்டினார்.

தொடர்ந்து பேசிய ப. நீலா அவர்கள் "தன் தந்தை யாரின் வேள்விக்கு வேண்டிய பெரும்பொருளை ஓரே விழுத் துணையாகிய ஆவடுதண்துறை அரனை வேண்டிப் பாடிப் பெற்ற 'இடரினும் தளரினும் என்னும் பதிகத்தின் திருக்கடைக் காப்பில் ஞானசம்பந்தரே 'விலையுடை அருந்தமிழ்' என்று குறிப்பிடுகிறார். நாவரசர் பெருமானும்,

'காயிரும் பொழில்கள் சூழ்ந்த
கழுமல ஊரர்க் கம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலும்
ஆவடு துறைய னாரே'

என்று இந்நிகழ்ச்சியை எடுத்துரைக்கின்றார். "ஈவதொன் றெமக் கில்லையே" என்ற ஞானசம்பந்தப் பெருமானின் வேண்டுகோள், இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல். - குலனுடையான்

கண்ணே உள; என்ற வள்ளுவரின் பெருந்தன்மையைப் பிரதி பலிப்பதாக உள்ளது. தானம் பெற்ற பெரும் பொருளைத் தன் தந்தை கைக் கொடுத்து,

" ஆதி மாமறை விதியினு லாறுசூழ் வேணி
நாத னுரைமுன் னுகவே புரியுநல் வேள்வி
தீது நீங்கநீர் செய்யவும் திருக்கழு மலத்து
வேத வேதிய ரனைவருஞ் செய்யவும் மிகுமால் "

என்று இறைவனளித்த பொற்கிழி இருநிதி வேத வேதியர்களுக்கெல்லாம் வேள்வி வேட்கப் பயன்பட வேண்டும் என்பதனை ஞானசம்பந்தர் திருவுள்ளம் விழைகின்றமையை சேக்கிழார் மிக அழகாக எடுத்துரைக்கின்றார். மேலும் காழி நகரில் மாமரங்களெல்லாம் வேள்வி வேட்கின்றன என்கிறார் சேக்கிழார்; பொன்னும் பொருளும் தரவல்ல விலையுடை அருந்தமிழைப் பாடிப் பயன் பெறுவோமாக " என்று பேசினார்.

அடுத்துப் பேசிய தூத்துக்குடி, வ. உ. சி. கல்லூரி முதல்வர் திரு. அ. சீனிவாசராகவன் M.A. அவர்கள் 'உழவாரப்படை' என்ற பொருள்பற்றிப் பேசுகையில் " அப்பரடிகள் உழவாரத்தனிப் படையால் தானும் சிவத்தொண்டு செய்து, பிறரையும் அப் பணியில் ஈடுபடுத்தினார், அப்பரடிகளின் உழவாரத் தனிப்படையோடு கூடிய தோற்றப் பொலிவை சேக்கிழார் பலவிடங்களில் எடுத்துரைக்கின்றார். இறைவன் திருக்கோயிலில் எழுந்தருளியில்லை; மக்கள் உள்ளங்களில்தான் நிறைந்துள்ளான்; மனத்துள் அவனைக்கண்டு வணங்க முடியாமல் ஆணவம் மக்களைத் தடுக்கிறது. 'தொண்டர் அகமலர் கோயில் கொண்ட ஐயன் ஐயாறனரே; என்றும், 'உருகுவார் உள்ளத்துள்ளார் ஒற்றியூர் உடையகோவே' என்றும் பல விடங்களில் உள்ளமே திருக்கோயில் என்கிறார். வெளியுலகக் கவர்ச்சியில் ஈடுபட்டு பொறிகளும் புலனும் தொடக்குற்று உள்ளக்கோயிலைக்காண முடியாது தடுக்கின்றது என்கிறார்.

ஆணவம் நீங்கிய நிலையில் படிப்படியே இறைவன் பால் நெருங்கும் அருள் நிலை கொஞ்சம் கொஞ்சமாக நாவரசரால் எடுத்தோதப்படுகின்றன. இறைவனை 'என் கண்ணுளான்' என்கிறார்; 'தோற்றக் கடல்' என்கிறார்; "ஈசன் இணையடி நீழல் இத்தகையது " என்கிறார். கண்டறியாதன கண்டேன் என்கிறார். எனவே, நாவரசர் அன்பு என்ற உழவாரப்படை

கொண்டு உள்ளக் கோயிலைச் செப்பஞ் செய்த அருளாளர் ஆவர் '' என்றெல்லாம் எடுத்தோதினர்.

இரவு குமாரி உமாமகேஸ்வரி, புவனேஸ்வரி குழுவினரின் குற்ருலக் குறவஞ்சி நாட்டிய அரங்கு நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் எழுந்தருளி நடன நிகழ்ச்சியிற் பங்கு பெற்றவர்களைப் பாராட்டி பொற்பதக்கங்கள் வழங்கி யருளி னர்கள். இரவு 12-மணி யளவில் மூன்ருந்திருமுறைத் திருநாள் நிறைவெய்திற்று.

## நான்காந் திருமுறைத் திருநாள்

26—5—64 செவ்வாய்க்கிழமை மாலை தொடங்கிய மாநாட்டில் சென்னை, வித்துவான். ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர்கள்.

தொடக்கவுரை நிகழ்த்திய திருவாரூர் இராஜாங்கக் கட்டளை கட்டளை விசாரணை வித்துவான், ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நாவரசர் திருப்பூந்துருத்தியில் அருளிய 'திரு அங்கமாலை' பற்றிக் குறிப்பிடுகையில் உடலிலுள்ள உறுப்புக் கள் எல்லாம் இறைவனை வணங்கவே அமைந்தன என்பதை நாவரசர் போன்று எவரும் விளக்கிக் கூறினரில்லை. தலையே நீ வணங்காய்' என்று தொடங்கும் இவ்வற்புதத்திருப் பதிகத்தை உலகம் செவி மடுத்து உய்ய வேண்டும்' என்ருர்கள்.

அடுத்து இராமநாதபுரம் சமஸ்தானம் திரு. K. காசிநாத துரை M. P. அவர்கள் சொற்பொழிவாற்றுகையில் 'சைவத் தைப் பரப்ப நாற்றுப் பாவுகின்ற இடம் தமிழ்நாடேயாகும். சிவஞானபோதம் போன்ற அரிய சாத்திர நூல்களை வேறெங் கும் காணமுடியாது, சமயத்தை வளர்த்த பெருமையில் எங்கள் சமஸ்தானத்துக்கும் பங்கு உண்டு. சமயக் கூட்டங்களுக்கு மக்கள் அதிகம் வரவேண்டும். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் இத்தகு மாநாடுகள் கூட்டுவதற்குப் பொதுமக்கள் உழைப்பு அவசியமாகும்' என்று கூறினர்கள்.

பின்னர், சென்னை, வித்துவான். திரு. T. முத்துக்கண்ணப் பர் M L. C. அவர்கள் 'ஐயாறன் அடித்தலம்' என்ற பொருள் பற்றிப் பேசுகையில் 'சைவ சமயாசாரியர்கள் இறைவன் திருவடியைப் புகழ்வதைத் தேவார திருவாசகங்களில் பரக்கக்

காணலாம். அத்தகையதொரு திருவடிப் புகழ்ச்சியாக அமைந்ததே நாவரசர் திருவையாற்றில் அருளிச்செய்த 'ஐயாறன் அடித்தலமே' என்று முடியும் இருபது பாடல்கள். ஐயாறன் அடித்தலம் துன்பக்கடலுள் வீழ்ந்துழலும் உயிர்களைக் கரையேற்றும்; பேரின்பம் நல்கும்; பற்றற்றோர்க்கும் பரமானந்தத்தை நல்கும்' என்று குறிப்பிட்டார்.

இறுதியாக உரை நிகழ்த்திய காஞ்சிபுரம், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் தருமையாதீனப்புலவர், திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள் 'சிவஞானசித்தியார்' பற்றிப் பேசுகையில் 'சித்தி என்பது விரைவாகப் பெரும்பேறு ஆகும். ஞானசாத்திரங்கள் பலவற்றுள்ளும் கூறவந்ததைத் தெள்ளத்தெளிய வுரைக்கும் சிறப்புடைய நூல் சித்தியாரே. தலைசிறந்த சமரச நூலாகவும் அதனைக் கொள்ள இடம் உண்டு' என்று கூறிச் சில பாடல்களையும் எடுத்துக்கூறி விளக்கினார்கள்.

இரவு கொடுமுடி ஏழிசைவல்லபி, திருமதி. K. B. சுந்தராம்பாள் குழுவினரின் இன்னிசையரங்கு நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருவணியவர்கள் பொன்னாடை வழங்கிச் சிறப்பித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் ஆசியாக சென்னை ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஏழிசைவல்லபியைப் பாராட்டி சிறப்புரை கூறினார்கள். இரவு 1 மணியளவில் நான்காந் திருமுறைத் திருநாள் இனிதே நிறைவெய்தலாயிற்று.

இந்தியத் தலைமை அமைச்சர் ஸ்ரீ நேரு அவர்கள் மரணமடைந்ததை முன்னிட்டு 27—5—64 புதன்கிழமைமுதல் 2—6—64 செவ்வாய்க்கிழமை வரை நிகழவிருந்த திருமுறை மாநாடும், இசையரங்குகளும் ஸ்ரீநேருவின் பிரிவிற்கு அனுதாபம் செலுத்தும்வகையில் முற்றிலும் நிறுத்தப்பெற்றன.

# செய்திகள்

தருமையாதீனத்தில :

## 24 ஆவது குருமகாசந்நிதானத்தின் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 19 ஆவது ஆண்டுக் குருபூஜைவிழா மிக்க சிறப்பாக நிகழ்ந்தது. அன்று காலை குருமூர்த்திகளின் ஆலயத்தில் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். வழிபாட்டிற்கு வந்திருந்தவர்கள் எல்லோருக்கும் பிரசாதங்கள் வினியோகம் செய்யப்பட்டன.

மாலையில் இருபத்துநான்கு தட்டுக்களில் நிவேதனப் பொருள்கள் வைத்து வலமாக நாதஸ்வர இன்னிசையுடன் எடுத்து வரப்பட்டன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கினார்கள். காலைமுதல் குருபூஜை விழாவை முன்னிட்டு சைவசித்தாந்த சாத்திரச் சொற்பொழிவுகள் ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களாலும், ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர்களாலும், ஆதீன ஓதுவாமூர்த்திகளாலும் நிகழ்த்தப்பெற்றன. மேலும் திருமுறைப் பாராயணமும் நடைபெற்றது. இரவு ஸ்ரீரங்கம், தருமையாதீனவித்துவான், எம்பார் பாகவதர், ஸ்ரீமத். விஜயராகவாச்சாரியார் குழுவினரால் " மாணிக்கவாசகர் " வரலாறு கதாகாலக்ஷேபமாகச் செய்யப்பட்டது. அன்பர்கள் வந்து கண்டும் கேட்டும் உய்ந்தனர்.

## ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி மகோற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானாம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி மகோற்சவம் 23—5—64 சனிக்கிழமை முதல் தொடங்கி 1—6—64 திங்கட்கிழமை முடிய உள்ள

நாட்களில் மிக்க சிறப்பாக நடைபெற்றது. 29-5-64 வெள்ளிக் கிழமை திருக்கல்யாண வைபவமும் 31—5—64 ஞாயிற்றுக் கிழமை திருத்தேர்ப் பெருவிழாவும், 1—6—64 திங்கட்கிழமை பஞ்சமூர்த்திகளும் ரிஷபாரூடராய்க் காவிரிக்கெழுந்தருளி தீர்த்தங் கொடுத்தலும் நடைபெற்றன. அன்று ஸ்ரீ ஞான புரீசுவரருக்குச் சிறந்த முறையில் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடம் ஸ்ரீகாசிவாசி இளவரசு, வித்துவான். ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் எழுந்தருளி தரிசனம் செய்தார்கள். பெருமக்கள் பலர் வந்து வழிப்பட்டுய்ந்தனர். திருக்கல்யாணத் திருநாளிலும், குருபூஜைத் திருநாளிலும் பிரசாதங்களும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் வரலாற்று நூலும் வைக்கப்பெற்ற துணிப்பைகளை அன்பர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கியருளினார்கள்.

## குருபூஜை விழா

1—6—64 திங்கட் கிழமை ஸ்ரீ குருஞானசம்பந்தர் சிவசமாதி கூடிய திருநாள். அன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் காலையில் மேலக்குருமூர்த்த தரிசனத்திற்கு எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். பின்னர் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஆலவாய்ச் சொக்கலிங்கப் பெருமான் வழிபாடு நிகழ்ந்தது. அபிஷேக ஆராதனைகள் சிறப்புற நிகழ்ந்தன. பெருமக்கள் பலர் வந்து வழிபட்டுய்ந்தனர்.

மாலை 6 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் காவிரித் திருமஞ்சனத்திற்கு எழுந்தருளினார்கள். அங்குப் பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணம் நிகழ்ந்தது. பின்னர் எல்லோருக்கும் சித்ரான்னங்கள் வழங்கப் பட்டன. இரவு 9 மணிக்குமேல் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் திருமடத்திற்கு எழுந்தருளி ஸ்ரீ சொக்க நாதப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்த்தி கொலு வீற்றிருந்து அருள்வழங்கினார்கள். பின்னர் எல்லோருக்கும் திருமெய்ஞ்ஞானம் வழங்கப்பட்டது.

## பட்டணப்பிரவேசத் திருநாள்

2-6-64 செவ்வாய்க்கிழமை ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. பின்னர் மாகேஸ்வர பூஜையும் சிறப்புற நிகழ்ந்தது. மாலை 6 மணியிலிருந்தே

பட்டணப்பிரவேசக் காட்சியைக்காண மக்கள் திரள்திரளாக வந்துகூடியவண்ண மிருந்தனர். இரவு பத்துமணிக்கெல்லாம் எடுப்பிடிகள் யானைகள் முதலியவற்றின் வரிசைகள் புறப்பட்டன.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ சொக்கநாதப்பெருமானை வழிபட்டு பட்டணப் பிரவேசத்திற்கு எழுந்தருளி சிவிகையில் ஆரோகணித்தார்கள். மாயூரம் முதலிய இடங்களிலிருந்து வந்த சைவப் பெருமக்கள் பலர் சிவிகையைச் சூழ்ந்துவர சிவிகை புறப்பாடாயிற்று. ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியவர்கள் மெய்யன்பர்களுக்கு மரியாதைகள் செய்வித்து ஆசி வழங்கினார்கள். இத்திருநாளுக்காப் போடப்பட்ட பந்தல் முகப்பு மிக அழகிய முறையில் பலரும்கண்டு வியக்கும் வண்ணம் அமைந்து விளங்கியது. முகப்பில் பல வண்ணங்களாலாகிய மின்விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. அது கண்டோர் கண்களைக்கவரும் வண்ணம் அமைந்து விளங்கியது. பட்டணப் பிரவேசத்திருநாளிலும் கொலு வீற்றிருந்து அருள் வழங்கினார்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்.

## அன்னம்பாலிப்பு

ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கலிங்கப்பெருமான் திருவருளால் 1—6—64 திங்கட்கிழமை ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவை முன்னிட்டு திருவாரூர், காசி, திருநெல்வேலி, கேதாரம், சிதம்பரம், ஸ்ரீ வில்லிபுத்தூர், சிவசைலம் இராமேஸ்வரம், மதுரை, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் அடியவர்கட்கும் ஏழைகட்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் அருளால் அன்னம்பாலிப்பும் சமய விரிவுரைகளும் நிகழ்த்தப்பெற்றன.

தருமையாதீனத்தில் 1—6—64 திங்கட்கிழமை குருபூஜை விழாவன்று திரள் திரளாக மக்கள்வந்து அன்னம்பாலிப்பில் கலந்துகொண்டு அறுசுவை உணவு உண்டு மகிழ்ந்தனர்.

## தோத்திர சாத்திரப் பாடவகுப்பு

தருமையாதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவையொட்டி 23-5-64 சனிக்கிழமை முதல் தோத்திர சாத்திரப் பாடவகுப்பு ஸ்ரீ சொக்கநாதர் பூஜை மடத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளால் நடைபெற்றது. வகுப்பில் ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களும், கல்லூரி மாணவர்களும், வேறு சிலரும் கலந்துகொண்டு பயன் பெற்றனர். தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர் சித்தாந்தக் கலைமணி, வித்துவான். திரு. சி. அருணைவடிவேல்

முதலியார் அவர்கள் சித்தாந்தச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள். 2—6—64 செவ்வாய்க்கிழமை காலை திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் வகுப்பு நிறைவு பெற்றது.

ஆச்சாள்புரத்தில்

## திருஞானசம்பந்தசுவாமிகள் ஐக்கிய உற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத் தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் 28—5—64 வியாழக்கிழமை இரவு ஸ்ரீ திருஞானசம்பந்தருக்கும் ஸ்ரீதோத்திர பூரணாம்பிகைக்கும் திருமணம் மிக்க சிறப்பாக நிகழ்ந்தது. அன்றுமாலை திருமணக் கோலத்துடன் முத்து விமானத்தில் பிராகாரத்தில் வலம்வருதல் நிகழ்ந்தது. இரவு ஸ்ரீ திருஞானசம்பந்தர் ஐக்கிய உற்சவம் - சிவஜோதியில் கலக்கும் காட்சி நிகழ்ந்தது. அன்பர்கள் பலர் கண்டு உய்ந்தனர். திருஞானசம்பந்தர் அருள் வரலாற்றைச் சிதம்பரம் பச்சையப்பன் உயர்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை அவர்கள் விளக்கமாக எடுத்துக் கூறி சொற்பொழிவாற்றினார்கள்.

---

EXRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

**Sri** Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

I had the privilege of visiting this famous shrine to-night.

Lord Siva in his supreme glory is seen here as a healer of all Ills. The Mahasannidhanam has kept the glory in fact and all praise to the Mahasannidhanam for maintaining this temple in a very excellent condition The neatness of the Temple attracts everyone. The Thevara Parayanam was very pleasingly done.

Everyone connected with the maintenance of the temple deserve our unstinted appreciation.

(Sd.) K. Venkatasubramani,
Divl. Inspector of Schools,
Madurai.

1—6—64.

# எதிர்காலம்

திரு. கே. முத்துஜோதிடர்

( குரோதிஞு ஆனிமீ 1௳ முதல் 32௳ முடிய)
(14—6—64 முதல் 15—7—64 முடிய )

**1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

(மேஷராசி 9 பாதமும்) அசுவதி நக்ஷத்திரம் நான்கு பாதங்களும் பரணி முதல் பாதமும் கிரஹசுகபோக போக்கியங்களைத் தரும். ஜீவனலாபம் ஏற்படும். பரணி 2, 3, 4 பாதமும் கார்த்திகை முதல் பாதமும் மிச்ர பலனைத் தரும்; விசேஷமான வரவையும் கொடுத்து விசேஷமாக செலவையும் கொடுக்கும், ஆரோக்யக் குறைவு காட்டும்; காரியங்கள் தவக்கப்படும். சனி, செவ்வாய் சுபமாகும்.

**2. ரிஷபம். கார்த்திகை ¾ - ரோஹிணி - மிருகசீரிஷம் ½**

ரிஷபராசி 9 பாதங்களும், சுபசோபனுதி வைபவங்களையும், உத்தியோகத்தில் மேல் பதவியையும்; ஆரோக்யத்தையும் தரும், இல்லறம் ஓங்கும்; ஸ்தாவர ஜங்கம சொத்துக்களில் மாறுதல் உண்டு பண்ணும். புதன், வியாழன் சுபமாகும்.

**3. மிதுனம் மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾**

மிருகசீர்ஷம், 2, 3 பாதங்களும் திருவாதிரை நான்கு பாதங்களும், சுபஸந்தோஷங்களைத்தரும். அடிக்கடி ஸஞ்சார பலனையும் நஷ்டதன பிராப்தியையும் உண்டுபண்ணும், புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் மிச்ர பலனைத்தந்து மனதிற்குத் தாங்கமுடியாத கவலைகளையும் கொடுக்கும்; அவமான சொற்களும் பெரியோர்களுடைய கோபமும் ஏற்படச்செய்யும், ஆனாலும்; சுபாதிகளும் பந்துமித்திராளுடைய சேர்க்கையும் தரும். வெள்ளி, சனி, ஞாயிறு சுபமாகும்.

**4. கடகம். புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.**

கடகராசி 9 பாதங்களும், சுபமேயாகும், வித்யாவிருத்தி ஏற்படச்செய்யும்; விவாஹாதி சுபங்கள் நடக்கும். வெகுகால மாய்த் தீராத வியவஹாரம் தீரும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

**5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$**

சிம்மராசி 9 பாதங்களும் நூதன உத்தியோக லாபத்தைத் தரும். ஸ்திரஜீவனம் ஏற்படச்செய்யும்; நூதன வஸ்திராபரணங்களும் ஸ்தாவர ஜங்கம சொத்துக்களும் சேரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$**

கன்னியாராசி 9 பாதங்களும்; ஸகல வித்யாபாரங்கதத்துவ யோக்கியதையையும் தபோபலத்தையும் தந்து தெய்வீக சக்தியை முன்னிட்டுக்கொண்டு அஸாத்யமெல்லாம் சுலப ஸாத்யமாகக் கொண்டு மஹாயக்ஞம் மகாப்பிரதிஷ்டைகளையும் சாச்வதமான தர்மபிரதிஷ்டைகளையும் தரும்; ஆரோக்யம் உண்டுபண்ணும். ஸதாதெய்வசிந்தையே முன்னிற்கும், வியாழன் வெள்ளி சுபமாகும்.

**7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, - சுவாதி - விசாகம் $\frac{3}{4}$.**

துலாராசி 9 பாதங்களும்; என்றும் கண்டிராத சுகபோகங்களையுந்தந்து எதுவும் எந்தக் காரியமும் அஸாத்யமே இல்லாமல் எல்லாம் சுலப ஸாத்தியமாகும். தெய்வீகத்தன்மை முன்னின்று மேலோர் பெரியோர்கள் எல்லாராலும் கொண்டாடும்படியுமான சத்தியையும் கொடுக்கும். ஜிவன லாபத்தையும் தரும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை.**

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்ர பலனைத்தரும். குடும்பத் தொல்லை அதிகமாகும்; ஸகல காரியங்களும் தவக்கத்தோடு நடக்கச் செய்யும். சனி, செவ்வாய் சுபமாகும்.

**9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$**

மூலம் பூராடம் இரண்டு நக்ஷத்திரங்களும் சுபமாகும். புத்திர பௌத்திர தரிசனங்களையும் புத்திராதிகளால் மேலான தன்மையையும் உண்டாக்கும் உத்திராடம் முதல் பாதம் நிரந்தர வியாதியை உண்டுபண்ணும். தெய்பலம் ஒதுங்கி நிற்கும். சனி, செவ்வாய் சுபமாகும்:

**10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$**

மகாராசி 9 பாதங்களும் மேலோர் பெரியோர்களுடைய அன்பையும் தரும். மங்கள காரியங்கள் நடைபெறும். கடன் நிவர்த்தியாகும். தொழில் ஓங்கும்; திங்கள், செவ்வாய் சுபமாகும்

**11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி - $\frac{3}{4}$.**

கும்பராசி 9 பாதங்களும் மஹத்தான சௌக்கியத்தை உண்டு பண்ணும். நூதன வஸ்திரா பரணச் சேர்க்கையும்; கிரஹபூமி

லாபங்களும் தரும். ஆனாலும் மத்தியில் ரோக பீடைகளையும் கவலைகளையும் காட்டும். தெய்வபலம் முன்னின்று காக்கும் ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மஹத்தான ஸௌக்யத்தைத்தரும் உத்தியோக உயர்வு ஏற்படச்செய்யும், நஷ்டதனம் தானாக வந்து சேரும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும்; மேலோர் பெரியோர்களுடைய அன்பு கிடைக்கச்செய்யும். திங்கள். செவ்வாய் சுபமாகும்.

குரோதி வருஷம் ஆனிமாதத்திய முக்கிய மாதக் குறிப்பு விபரம் பெரியோர்களுக்கும் மேலோர்களுக்கும் ஆஸ்தீக ஜனங்களுக்கும் பயபக்தியுடன் தெரிவித்துக்கொள்ளும் எதிர்கால பலன் குறிப்பு:-

சென்ற சுபகிருது வருஷம் தைமாதம் அஷ்டக்ரகக் கூட்டம் சேர்ந்த காலம் முதல் ஒவ்வொரு மாதமும் ஞானசம்பந்தம் என்னும் தருமையாதீனம் பத்திரிகையின் வாயிலாக எதிர்கால பலன் என்னும் குறிப்பின் கீழ் நமது பாரத பூமியில் கிரகங்களின் நிலையைக்கொண்டு சுபிட்ச, துர்பிட்ச விபரமும், மகாஜனங் களுக்கு ஏற்படக்கூடிய சுக கஷ்டங்களும் அந்தந்தக் காலத்திற்குத் தக்கபடி மகாஜனங்கள் நடந்து கொள்ளவேண்டிய தெய்வீக சக்தி பொருந்திய லக்ஷம்கோடி அர்ச்சனைகளும், அற்புத சாந்தி ஹோமங்களும், துர்பிட்ச நிவாரணமாயும் அகால மரணம், பர சக்ரபயம் வராமல் தடுக்க மகா யக்ஞங்கள் செய்ய வேண்டிய முறைகளையும் எழுதிக்கொண்டு வருவதில் நமது கயிலைக் கருணாமூர்த்தியாகிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஒவ்வொரு தேவஸ்தானங்களிலும், புண்ணிய பூமிகளிலும் லக்ஷம்கோடி அர்ச்சனைகளும் மகா ருத்ராதிருத்ர ஹோமங்களும் மகாபிரதிஷ்டைகளும் உலக க்ஷேமத்திற்காகச் செய்து வருகிறார்கள். அவ்வாறே ஆங்காங்கு உள்ள ஆலயங் களிலும் லக்ஷார்ச்சனை, கோடியர்ச்சனை, ஹோமம் முதலியன செய்து வந்தால் நாட்டிற்கும் மக்களுக்கும் நலம் உண்டாகும்.

திருமையாதீனம் ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜ சுவாமி தேவஸ்தானம்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
கும்பாபிஷேக தரிசனத்திற்குப் பின்னர் எழுந்தருளுதல்